Registered as a Newspaper　பக்கங்கள் 8　விலை ரூபா 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 04　திருவள்ளுவர் ஆண்டு 2024　ஐப்பசி 27　(12.11.93)　வெள்ளிக்கிழமை　ஓசை 267

## 'ஒப்பரேசன் தவளை'

பூநகரி - நாகதேவன்துறை கூட்டுத்தளம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கைக்கு 'ஒப்பரேசன் தவளை' என பெயரிட்டுள்ளனர். இந்நடவடிக்கையானது விடுதலைப் புலிகளால் பெயரிட்டு நடாத்தப்படும் மூன்றாவது தாக்குதலாகும். 1991 ஜூலையில் ஆனையிறவு தளம் மீது புலிகள் நடாத்திய தாக்குதலுக்கு ஆ. க. வெ. நடவடிக்கை என பெயரிட்டதும் பின்னர் இவ்வருடம் மண்கிண்டி மலை இராணுவ முகாம் தகர்ப்பு நடவடிக்கைக்கு இதய பூமி I எனப் பெயரிட்டதும் தெரிந்ததே. இவ் 'ஒப்பரேசன் தவளை' கடலிலும், தரையிலும் மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## புலிகள் இயக்கம் படைத்த வரலாற்றுச் சாதனை

# பூநகரி படைத்தளம் புலிகளிடம் வீழ்ந்தது

# 400க்கு மேற்பட்ட சிங்களப் படையினர் பலி!

## பூநகரிப் பிரதேசம் முழுவதும் புலிகளின் கட்டுப்பாட்டில்

(யாழ்ப்பாணம்)

**யாழ். குடாநாட்டு முற்றுகைக்கு கேந்திர மையமாக இருந்து வந்த பூநகரி கூட்டுத் தளம் நேற்று அதிகாலை விடுதலைப் புலிவீரர்களால் தாக்கி அழிக்கப்பட்டது. "ஒப்பரேசன் தவளை" எனப் பெயரிடப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பாரிய நடவடிக்கையில் இதுவரையில் 400க்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர். இந்நடவடிக்கையின் பின் பூநகரிப் பிரதேசம் புலிகளின் பூரண கட்டுப்பாட்டில் வந்தது.**

**இந்த வெற்றிகரமான தாக்குதலில் டாங்கிகள், நீருந்து விசைப்படகுகள் நீண்ட தொலைவு பீரங்கிகள் பின்னுதைப்பற்ற பீரங்கி, நவீன ராடாகள், 50 கலிபர் இயந்திரத் துப்பாக்கிகள் உட்பட பெருந்தொகையான ஆயுதங்களும் வெடிப்பொருள்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.**

**இத்தாக்குதலில் 150க்கும் மேற்பட்ட விடுதலைப்புலிப் போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.**

நேற்று அதிகாலை 1-45 மணியளவில் விடுதலைப் புலிகளின் படையணிகள் பூநகரித் தளம்மீது பாரிய தாக்குதலைத்தொடுத்தன தமிழ் மக்களின் பிரயாணத்தடைக்கு காரணமாக இருந்த இந்த இராணுவ-கடற்படைத் தளத்தை முற்றாகத் தகர்த்தெறிவதே விடுதலைப்புலிகளின்பிரதான நோக்கமாக இருந்தது. இந்தக் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த தளம் பல இராணுவ முகாம்களையும், மினி முகாம்களையும், கடற்படைத்

(8ஆம் பக்கம் பார்க்க)

## நாகதேவன் கடற்படை தளத்தை




மோதல் இடம் பெற்ற பூநகரிப் பிரதேசம்

## இறந்தவர்களில் ஒருவர் மேஜர்

(கொழும்பு)

## தலைவர் பிரபாகரன்

# புலிகளின் கட்டுப்பாட்டில்

(யாழ்ப்பாணம்)


**யாழ். குடாநாட்டு முற்றுகைக்கு கேந்திர மையமாக இருந்து வந்த பூநகரி கூட்டுத் தளம் நேற்று அதிகாலை விடுதலைப் புலிவீரர்களால் தாக்கி அழிக்கப்பட்டது. "ஒப்பரேசன் தவளை" எனப் பெயரிடப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பாரிய நடவடிக்கையில் இதுவரையில் 400க்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர். இந்நடவடிக்கையின் பின் பூநகரிப் பிரதேசம் புலிகளின் பூரண கட்டுப்பாட்டில் வந்தது.**

**இந்த வெற்றிகரமான தாக்குதலில் டாங்கிகள், நீருந்து விசைப்படகுகள் நீண்ட தொலைவு பீரங்கிகள் பின்னுதைப்பற்ற பீரங்கி, நவீன ராடர்கள், 50 கலிபர் இயந்திரத் துப்பாக்கிகள் உட்பட பெருந்தொகையான ஆயுதங்களும் வெடிபொருள்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.**

**இத்தாக்குதலில 150க்கும் மேற்பட்ட விடுதலைப்புலிப் போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.**

நேற்று அதிகாலை 1-45 மணியளவில் விடுதலைப் புலிகளின் படையணிகள் பூநகரித் தளம்மீது பாரிய தாக்குதலைத்தொடுத்தன தமிழ் மக்களின் பிரயாணத்தடைக்கு காரணமாக இருந்த இந்த இராணுவ-கடற்படைத் தளத்தை முற்றாகத் தகர்த்தெறிவதே விடுதலைப்புலிகளின்பிரதான நோக்கமாக இருந்தது. இந்தக் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த தளம் பல இராணுவ முகாம்களையும், மினி முகாம்களையும், கடற்படைத்

(8ஆம் பக்கம் பார்க்க)




மோதல் இடம் பெற்ற பூநகரிப் பிரதேசம்

# நாகதேவன் கடற்படை தளத்தை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்

(யாழ்ப்பாணம்)

பூநகரி இராணுவத் தளத்துடன் இணைந்திருந்த நாகதேவன்தீவு கடற்படை முகாம் மீது நேற்றிரவு விடுதலைப் புலிகள் நடாத்திய உக்கிர தாக்குதலில் அக்கடற்படை முகாம் புலிகளிடம் வீழ்ச்சியடைந்தது. விடுதலைப் புலிகள் தாக்குதல் தொடுத்து சில மணி நேரத்தில் இம்முகாம் வீழ்ச்சியடைந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இம்முகாம் மீது தாக்குதல் தொடங்கியதும் அங்கிருந்த கடற்படையினர் கடல்வழியாக வெளியேறி ஓட எடுத்த முயற்சியும் விடுதலைப்புலிகளால் முறியடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இம் முகாம் புலிகளிடம் வீழ்ச்சி கண்டதை பி.பி.சியும் உறுதிப்படுத்தியது.

# கரும்புலி மேஜர் கணேஸ் உட்பட 150 விடுதலைப் புலிகள் வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

யாழ்குடாநாட்டை முற்றுகைக்குள் இறுக்கி தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை நசுக்கிவிட சிறிலங்கா அரசு மேற்கொண்ட முயற்சியை முறியடிக்க, பூநகரி - நாகதேவன்துறை இராணுவ கடற்படைத் தளங்களையும் பல மினிமுகாம்களையும் தகர்த்தெறிந்து விடுதலைப் புலிகள் சாதனை புரிந்துள்ளனர்.

இவ் வெற்றிகர தாக்குதலில் கடற்கரும்புலி மேஜர் கணேஸ்(நாகநாதி ஜீவநேசன் நவக்கிரி புத்தூர் மேற்கு புத்தூர்) உட்பட 150க்கு மேற்பட்ட போராளிகள் வீரச்சாவடைந்தனர்

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்

# ஒரு விசைப்படகு தகர்ப்பு; 5 படகுகள் மீட்கப்பட்டன

நாகதேவன் கடற்படைத் தளத்தின் மீது கரும்புலி மேஜர் கணேஸ் நடாத்திய கரும்புலித் தாக்குதலில் நீருந்து விசைப் படகு ஒன்று தகர்த்தெறியப்பட்டது.

நாகதேவன்துறை விடுதலைப்புலிகளிடம் வீழ்ச்சிகண்டதைத் தொடர்ந்து அங்கிருந்த கடற்படையினரின் பல இராணுவத்தளபாடங்கள் கைப்பற்றப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட கடற்படை உபகரணங்களில் ஐந்துநீருந்து விசைப்படகுகளும் வேறுபல சாதனங்களும் அடங்குவதாகவும் தெரியவருகின்றது.

# 120 எம்.எம். பீரங்கிகள், ராடர்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன

பூநகரி - நாகதேவன்துறை இராணுவ கடற்படை முகாம்கள் மீது விடுதலைப்புலிகள் நடத்திய வெற்றிகரத் தாக்குதலில் கனரக ஆயுதங்கள் உட்பட பல நவீனரக ஆயுதங்களும் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன

இத்தாக்குதலில் விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் ஒரு தொகுதி வருமாறு.

- 120மி.மீ. நீண்ட தொலைவு மோட்டார்பீரங்கி-04க்குமேல்
- 106 மி மீ. பின்னுதைப்பற்ற பீரங்கி - 01

(7ஆம்பக்கம்)

## இறந்தவர்களில் ஒருவர் மேஜர்

(கொழும்பு)

பூநகரி தளம்மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்டவர்களில் ஒரு இராணுவ மேஜரும் அடங்குவார் என இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

## விமானங்கள் ஹெலிகள் அணிவகுப்பு

(நமது நிருபர்)

பூநகரி பகுதி நோக்கி மூன்று புக்காரா போர் விமானங்கள் ஒன்றன்பின் ஒன்றாக அணி வகுத்து சென்றன. மேலும் ஆறு உலங்கு வானூர்திகளும் அங்குசென்றதை காணமுடிந்தது.

இதேவேளை நேற்று மாலை பலாலி விமான நிலையத்தை அண்டிய வான் பரப்பில் பல கோணங்களில் தலை கீழாகவும், செங்குத்தாகவும் கரணம் அடித்தும் பலவாறு பரீட்சையில் புக்காரா விமானங்கள் ஈடுபட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. (சி)

## தலைவர் பிரபாகரன் போரை நெறிப்படுத்தினார்

விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனே பூநகரி இராணுவ-கடற்படைக் கூட்டுத்தளம்மீது நடாத்திய தாக்குதலை நெறிப்படுத்தியதாக இராணுவப் பேச்சாளரை மேற்கோள்காட்டி ரூபவாகினி நேற்றிரவு அறிவித்தது. சாவகச்சேரியிலிருந்து அவர் இத் தாக்குதலை நெறிப்படுத்தியதாகவும் மேலும் அது தெரிவித்தது.

இத் தாக்குதலின்போது 100 படையினர் கொல்லப் பட்டுவிட்டதாகவும், இருயுத்தடாங்கிகள், ஐந்துஇராணுவ வாகனங்கள், 120 துப்பாக்கிகள் மற்றும் நாகதேவன் துறை கடற்படை முகாமிலிருந்து இரு நீருந்து விசைப் படகுகளையும் புலிகள் கைப்பற்றிச் சென்றுவிட்டனர் எனவும் ரூபவாகினி மேலும் தெரிவித்தது.

# இரு டாங்கிகள் புலிகளால் மீட்பு

(கொழும்பு)

பூநகரி - நாகதேவன்துறை தளங்கள் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலின் போது பல கனரக வாகனங்கள் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

[7ஆம் பக்கம் பார்க்க]

# சிதறி ஓடிய படையினரை புலிகள் தேடி வருகின்றனர்

(யாழ்ப்பாணம்)

பூநகரி முகாமிலிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் புலிகளின் தாக்குதலையடுத்து அங்கிருந்து தப்பி ஓடி அங்குள்ள காடுகளை அண்டிய கிராமப்புறங்களில் பதுங்கியுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு அங்கு பதுங்கியுள்ள படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே தொடர்ந்தும் கடும்மோதல் இடம்பெற்று வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிதறியோடிய படையினர் சிலர் கடற்கரைப்பக்கமாகச் சென்று தப்பியோட வழியின்றி கடலுக்குள் இறங்கிவிட்டதாகவும் அவர்களை மீட்டெடுக்க சிறிலங்கா கடற்படையினர் எடுக்கும் முயற்சி

[8ஆம் பக்கம் பார்க்க]

## பல இராணுவத்தினர் பற்றி தகவல் இல்லையாம்

(கொழும்பு)

பூநகரி-நாகதேவன்துறை இராணுவ, கடற்படைத்தளங்கள் மீது நேற்று விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்திய போது அங்கு 1500படையினர் நிலைகொண்டிருந்ததாகவும் இறந்தவர்கள் தவிர மற்றையோர்பற்றிநிலபரங்கள்தெரிய

(8ஆம் பக்கம் பார்க்க)

**வரி விளம்பரம்**

**அப்பியாசக்கொப்பி**

மாணவர்களின் சீருடைகள் பிரகாசமான வெண்மையுடன் விளங்கிட மில்க்வைற் நீல சோப், மில்க்வைற் சலவைத் தூள் உதவுகின்றன. 25 மில்க் வைற் நீலசோப் மேலுறைகள்! சலவைத்தூள் வெற்றுப் பக்கற் றுக்கள் தருபவர்க்கு ஒரு அப்பியாசக்கொப்பி அன்பளிப்பு' "மில்க்வைற்" சி-7916

**சனி மாற்றப்பலன்கள்**

வியாழ, சனி மாற்றங்கள் ரூ 10/- பாடசாலைப் புத்தகங்கள், அலுவலக உபகரணங்கள், இந்திய இலங்கைச் சஞ்சிகைகள், தீபாவளி வெளியீடுகள், வாழ்த்துக்கள், மடல்கள் விற்பனையாகின்றன தினேஷ் புத்தகசாலை பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (6548)

**மகாதேவா ஜோதிடம்**

உங்கள் பெயர் எண்ணை அதிஷ்டகரமாக மாற்றுங்கள் 239, ஆஸ்பத்திரி வீதியில் காலை 10.00 - 1.00 140 செல்லர் வீதி, கல்வியங்காட்டில் பிற்பகல் 3.00 - 6.00 வரையும் சந்திக்கலாம்' (6555)

**போத்தல்கள் தேவை**

சகல விதமான வெற்று ஹார்லிக்ஸ் போத்தல்களும், வெற்று ஜாம் போத்தல்களும் கொள்வனவு செய்யப்படும். ரேஸ்ட்லைன் இண்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டட், 14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம் சி 7921

**சோதிடம்**

ஜாதகம் எழுத, விவாகப் பொருத்தம்பார்க்க, அதிர்ஷ்ட எண்களில் பெயரமைக்க உங்கள் எதிர்காலமறிய வேலணை சோதிடர் V. A. சிவராசா 152 B, அரசடி றோட் கந்தர்மடம் யாழ்ப்பாணம். (6556)

**நவீன சிகிச்சை**

உங்களின் இருதயம் சீராக இயங்குகின்றதா? இரத்த அழுத்தத்துடன் நாடித்துடிப்பு எவ்வளவு? யாவும் Electronic Aunicular Pulsations Therapy யினாலும் Digital Electronic Meter மூலமும் நவீன வைத்திய உபகரணங்களினாலும் சகல நோய்கட்கும் சிகிச்சையளிக்க


## 45-ம் நாள் நினைவஞ்சலி



### லெப். சீலன் (சலீம)

[தர்மகுலசிங்கம் சுந்தரராசன்]

தாயின்மடியில்: 6—12—1973

தாயகமடியில்: 29—9—1993

குடும்பத்து முதல் மைந்தா
குணத்தின் குன்றே
இனத்தின் விடிவிற்காய்
இன்னுயிரை நீத்தாயே
உன்னைப் பிரிந்தோம்
உன்னினைவை மறப்போமா
நாளோ நாற்பதோடைந்தாச்சு
நாளுமுன்னை நினைக்கின்றோம்.

உன் பிரிவால் வாடும்
அப்பா: தர்மகுலசிங்கம்,
அம்மா. சற்குணதேவி,
சகோதரிகள்.

8-ம், யூனிற்,
யோகபுரம்.

(6546)

## 45-ம் நாள் நினைவஞ்சலி



## நெஞ்சை விட்டகலாத 45-ம் நாள் நினைவலைகளும் அந்தியேட்டி அழைப்பும்



ஆண்டவன் படைப்பில் 22-05-1971

ஆண்டவர் அழிப்பில் 29-09-1993

### செல்வி இராசமணி நடராசா

(சின்னத்தங்கச்சி)

"எமது குடும்பத்தின் பாசமிகு இராசமணியே!
அணையா சோதியாய் ஒளிரும் சுடரே!
ஆண்டுகள் பல போயினும் - அகலாது
உன் நினைவலைகள் எம் நெஞ்சைவிட்டே"

அன்னாரின் 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டிகரண கிரியைகளும் எமது இல்லத்தில் 12-11-93 இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் நடைபெறுகையில், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரது மறைவின் போது எமது துயரில் பங்கேற்றோருக்கும் சகல வழிகளிலும் உதவிகள் புரிந்தோருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்
திரு. திருமதி. ஆ. நடராசா
குடும்பத்தினர்.

மூகாவில்'
இயக்கச்சி.

(6549)

## 45-ம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில்: 1972-05-31

தாயக மீட்பில்: 1993-09-29

### வீரவேங்கை ஜனார்த்தனி

சீனிவாசகம் குணவதி

நற்குணத்தால் குணவதியாய் பிறந்த குணா
எம்மையெல்லாம் தவிக்க வைத்துவிட்டு

## 45-ம் நாள் நினைவஞ்சலி 12. 11. 93இல் அந்தியேட்டி அழைப்பு



பிறப்பு 12. 07. 1972

வீரச்சாவு 29. 09. 1993

### மேஜர் மனோ/யாழிசை

(திருலோகசிங்கம் செல்வராணி)

காங்கேசன்துறை

வீரத்தின் விளை நிலமாம்
வேங்கையின் தலைமகனாய்
விளங்கிடும் பெரும் தலைவன்
அணியினில் இணை சேர்ந்து
மண்ணினை மீட்டுத் தமிழ்
மரபினர் மானம் காக்க
எண்ணியே துணிந்து போரில்
வேகமாய்ப் படை நடத்தி
விரட்டியே தொடர்ந்த வேளை
மார்பிலே குண்டு தாங்கித்தமிழ்
மண்ணிலே சாய்ந்து ஓய்ந்தாய்
நிறைவு நாம் செய்வோம் ஓர் நாள்
எழில் கொஞ்சும் நாடு காண்போம்.

- குடும்பத்தினர்

தற்போதைய முகவரி
மானிப்பாய் மேற்கு,
5-ம். நம்பர் வீடு,
கட்டுடை.

(சி-7917)

## நினைவு கூருகின்றோம் ... 1993-11-12

1985-ஆம் ஆண்டு இதேதினத்தில் வீரச்சாவெய்திய,

★ **கே. தெய்வநாயகம்** (தம்பிலுவில்-அம்பாறை)

★ **சின்னவன் மார்க்கண்டு** (பொத்துவில்-அம்பாறை)

1986ஆம் ஆண்டு சந்நதி வீதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் எறிகணைத்தாக்குதலில் வீரச்சாவெய்திய.

**வினோத்** (கணபதிப்பிள்ளை பரதன் உரும்பராய் வடக்கு -யாழ்)

1987ஆம் ஆண்டு யாழ் கொக்குவில் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய.

**ராஜ்** (ஞானமுத்து கிறிஸ்ரிதனசீலன் (மோகன்)-முருங்கன் -மன்னார்)

கனகம்புளியடிச்சந்தியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**லெப். கீதன்** (வே. திருக்கேதீஸ்வரன்-மட்டுவில் வடக்கு-சாவகச்சேரி)

சி 7921

## சோதிடம்

ஜாதகம் எழுத, விவாகப் பொருத்தம்பார்க்க, அதிர்ஷ்ட எண்களில் பெயரமைக்க உங்கள் எதிர்காலமறிய வேலணை சோதிடர் V. A. சிவராசா 152 B, அரசடி றோட் கந்தர்மடம் யாழ்ப்பாணம். (6556)

## நவீன சிகிச்சை

உங்களின் இருதயம் சீராக இயங்குகின்றதா? இரத்த அழுத்தத்துடன் நாடித்துடிப்பு எவ்வளவு? யாவும் Electronic Aunicular Pulsations Therapy யினாலும் Digital Electronic Meter மூலமும் நவீன வைத்திய உபகரணங்களினாலும் சகல நோய்கட்கும் சிகிச்சையளிக்கப்படும். இரெட்ணம் வைத்தியசாலை, 129, ஸ்ரேசன் றோட் யாழ்ப்பாணம். (6518)

## நூல் வெளியீடு

(கொழும்புத்துறை)

யாழ். கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயத்தின் விஞ்ஞான மன்றத்தின் விஞ்ஞான தினமும் 'அறிவியல் கதிர்' நூல் வெளியீடும் இன்று காலை 11-00 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அதிபர்கள் சங்கத் தலைவர் திரு. அ. பஞ்சலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (24)

**COMPUTER**
**கல்வி**
**DIPLOMA IN BASIC LANGUAGE 4 MONTHS**

செவ்வாய், வியாழன் வகுப்புகள்
ஆரம்பம்: 18. 11. 93
10. 30 மணி
கூடிய செய்முறைப் பயிற்சி
இலவச அச்சடித்த பாடக் குறிப்பு பயிற்சி முடிவில் சான்றிதழ்.
கட்டணம்:
மாதம் 400/- மட்டுமே

**School of Business Administration**
(Pioneers in Computer Education)
16, 3rd CROSS ST.,
JAFFNA.
(சி-7896)



## கப்டன்-கதிர்/கீதன்

(இராமையா பாஸ்கரன்)
[சிவபுரி திருமலை]

**தாயின் மடியில்:** 26-11-1972
**தாயக மண்ணில்:** 29-9-1993

திருமலையில் அவதரித்து
சிங்கள காடையர் கொட்டம் அடக்க
புலியாகப் பாய்ந்து
கிளாலியில் எதிரியவன் கொட்டம் அடக்க
களம் குதித்து களமாடி
எதிரியின் பல் உடைத்து
வீரகாவியமான கதிர்
உன் நினைவுகள் என்றும் மாறாது
எம் இதயம் விட்டு...

பாடசாலை வீதி,
நவாலி தெற்கு,
மானிப்பாய்

பிரிவால் வாடும்
குடும்பத்தினர்
(6552)

தென்னிந்திய திருச்சபை யாழ் பேராயம்

## நம்பிக்கை இல்லம்
## (HOUSE OF HOPE)

மேற்படிஇல்லத்திற்குஉடல்ஊனமுற்ற(PhysicalyDisabled) ஐந்து (5) வயதிற்கும் பதினாறு (16) வயதிற்கும் இடைப்பட்ட சிறுவர், சிறுமிகள் சேர்த்துக் கொள்ளப்பட இருக்கின்றனர். இதற்கு தகுதியுள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகிறது.

விண்ணப்பதாரிகள் குடும்ப விபரத்துடன் திருமதி P. கதிர்காமர் அவர்களை இறையியல் கல்லூரி, மருதனாமடம், சுன்னாகம் என்ற விலாசத்தில் தொடர்புகொள்ளவும்.

செயற்திட்ட பணிப்பாளர்
தென்னிந்திய திருச்சபை.

பேராயர் காரியாலயம்,
வட்டுக்கோட்டை.
(சி-7918)



**தாயின் மடியில்:** 1972-05-31
**தாயக மீட்பில்:** 1993-09-29

## வீரவேங்கை ஜனார்த்தனி

சீனிவாசகம் குணவதி

நற்குணத்தால் குணவதியாய் பிறந்த குணா
எம்மையெல்லாம் தவிக்க வைத்துவிட்டு
தமிழீழம் மீட்க தலைவன் பாதையிலே சென்றாய்
புயலென வந்த கொடியவரை
பலோப்பளையில் புலியாகிக் கொன்றாய்
தேசத்தை நினைத்து தேகத்தை துறந்தவளே
உன்நினைவில் தொடரும் எம பயணம்

இன்று வெள்ளிக்கிழமை (12-11-1993) இவரது வீட்டில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும்படி சகபோராளிகள், ஆதரவாளர்கள், நண்பர்கள் அனைவரையும் வேண்டிக்கொள்கிறோம்.

அம்மன் கோவிலடி,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

இவரின் பிரிவால் வாடும்
அப்பா, அமமா,
சகோதரர்கள், உறவினர்கள்.
(6530)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



ஈழமண்ணில் உதயம்
- - 1979

ஈழமண்ணிற்காக அஸ்தமனம்
12-11-1992

கடற்புலி

## வீரவேங்கை தேவகி

[சத்தியக்லா அருளன்]

தேசத்தின் விடிவிற்காய் - தேடி
எம்மை வந்த நீ
பாசறையில் பயிற்சிதனை பாடமாய்
எடுக்கையிலே - எம்
கடமை கண்ணியம் கட்டுப்பாட்டுக்காய்
கரைந்து போனாயே.

குரும்பசிட்டி,
தெல்லிப்பளை.

நண்பர்கள்.
(6557)

5-ம், ... வீடு,
கட்டுடை.
(சி-7917)

## நினைவு கூருகின்றோம் ...
## 1993-11-12

1985-ஆம் ஆண்டு இதேதினத்தில் வீரச்சாவெய்திய,

★ **கே. தெய்வநாயகம்** (தம்பிலுவில்-அம்பாறை)
★ **சின்னவன் மார்க்கண்டு** (பொத்துவில்-அம்பாறை)

1986ஆம் ஆண்டு சந்நதி வீதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் எறிகணைத்தாக்குதலில் வீரச்சாவெய்திய.
**வினோத்** (கணபதிப்பிள்ளை பரதன் உரும்பராய் வடக்கு -யாழ்)

1987ஆம் ஆண்டு யாழ் கொக்குவில் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய.
**ராஜ்** (ஞானமுத்து கிறிஸ்ரிதனசீலன் (மோகன்)-முருங்கன் -மன்னார்)

கனகம்புளியடிச்சந்தியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,
**லெப். கீதன்** (வே. திருக்கேதீஸ்வரன்-மட்டுவில் வடக்கு-சாவகச்சேரி)

சுன்னாகம், இணுவில் பகுதிகளில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 02 மாணவிகள், 02 பெண் குழந்தைகள் உட்பட 08 பொதுமக்கள்.

1988ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான, பொருளியல் ஆசிரியர்,
**நாகேந்திரம் கிருஷ்ணானந்தன்** -கச்சேரி, நல்லூர்வீதி, யாழ்)

சரசாலையில் தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட
**இளையன்**

1989ஆம் ஆண்டு வட்டமடு, அணைக்கட்டுப்பகுதியில் தேசவிரோதிகள் சுட்டதில் வீரச்சாவெய்திய.
**குகன்/பாபு** [கா. பாபு-அக்கரைப்பற்று 08-அம்பாறை]

1990ஆம் ஆண்டு சிறிலங்கா விமானப்படையினரின் விமானக்குண்டுவீச்சில் விழுப்புண் அடைந்து யாழ் போதனாவைத்தியசாலையில் வீரச்சாவெய்திய,
**கதிர்மாஸ்ரர்** [முத்துக்குமாரு ஐங்கரன்-சித்தங்கேணி, வட்டுக்கோட்டை-யாழ்]

குப்பிளான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய.
**மீரா** [சுரர்சினி தங்கத்துரை-பன்னங்கண்டி, மூன்றாம் வாய்க்கால்-பரந்தன்]

மாங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய
**கமலன்** [இராமசாமி மூர்த்தி-இராமனூர்-புளியங்குளம்]

மட்டு-பெரியகளம், மஞ்சத்தொடுவாய் பகுதியில் சிறிலங்கா இராணுவம் மற்றும் தேசவிரோதிகள் சுற்றிவளைத்தபோது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,
**துடிப்பான்** (— — மகிழடித்திவு-மட்டு)

1991ஆம் ஆண்டு அம்பாறை றொட்டைப்பகுதியில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய,
**இந்துராஜ்** [மூக்கையா வனராஜா-கோமாரி, பொத்துவில்-அம்பாறை]

1992ஆம் ஆண்டு பருத்தித்துறை, கற்கோவளம் பகுதியில் ஏற்பட்ட எதிர்பாராத விபத்தில் எமைப்பிரிந்த
**தேவகி** [சத்தியகலா அருளன்-குரும்பசிட்டி, தெல்லிப்பழை-யாழ்]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

## தமிழீழ விடுதலைப் புலிகள்.

★ இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்கள்.

(சி-7915)

சிறுகதை

# எதிரொலி

து. வைத்திலிங்கம்

கொழும்பு நகருக்கே உரிய காலை நேரத்துப் பரபரப்பு உறுமிக்கொண்டு வந்த விமானப்படையைச் சேர்ந்த ஜீப் வண்டி விமானப்படை அதிகாரி திலக் ராஜபக்ஷாவின் வீட்டுவாசலில் நின்றது. மிக விணயத்துடன் இறங்கி வந்த சாரதி மிடுக்குடன் சலூட் அடித்தான்.

''சுமி ''

கணவனின் குரலைக் கேட்டு ஓடோடிவந்தாள் சுமி. அவளின் முகத்தில் சுரத்தில்லை. இறுகிக் கெட்டியாகக் காட்சி அளித்தது.

சுமி வட் ஹாப்பிண்ட் ரூ யூ? வட்ஸ்தமாற்றர் திலக் மிக அவசரமாகக் கேட்டான்.

ஒன்றுமில்லை என்ற பாவனையில் சுமி தலையை ஆட்டினாள்.

''நோ நோ.. நீ சந்தோஷமாக இல்லை''

இரவு நடந்த சம்பாஷணை திலக்கின் ஞாபகத்துக்கு வந்தது.

''திலக், இந்தப் போர் எவ்வளவு காலத்துக்கு நீடிக்கும்? ஒவ்வொரு நாளும் அம்புலன்ஸ் வண்டி வீதியால் அலறிக்கொண்டு ஓடும் போது அதன் பயங்கர சத்தம் என்னைப் பைத்தியக்காரியாக்கி விடும் போல் தெரிகிறது ..''

யாருக்குத் தெரியும்? எங்களைப் படைத்த இறைவன் தான் பதில் கூறவேண்டும்.

யாரைப்பார்த்தாலும் போர் வெறி கொண்டு திரிகின்றனர். சுமி எனக்கு இந்த விமானமோட்டி உத்தியோகம், இந்த படாடோபம், இந்த இயந்திரமயமான வாழ்க்கை எல்லாமே வெறுத்து விட்டது. பேசாமல் ஓய்வு பெற்று விட்டு கிராமத்துக்குப் போய் விடுவோமா என என் மனம் விரும்புவதை என்னால் தடுக்க முடியாமல் உள்ளது.''

பெருமூச்சுடன் திலக் திரும்பிப்படுத்தான்.

மாத்தறை நகரிலிருந்து உள்ளுக்குள், வளவை கங்கையின் அரவணைப்பில் உள்ள அழகான கிராமம் அது.

தன் சிறுவயதில் ஓடியாடிய இடங்கள், தன் இளமைக்கால நண்பர்கள்.. எல்லாமே அவனின் ஞாபகத்துக்கு வந்து ஓடி மறைந்தன.

அவனின் நெருங்கிய நண்பன் சிவராஜாவின் முகம் வந்து காட்சி அளித்தது.

சிவராஜாவின் தந்தையின் பெரிய கடை மாத்தறையில் இருந்தது. திலக்கின் வீட்டுக்குப் பக்கத்தில் சிவராஜாவின் வீடு.

சிறுவயதில் மாத்தறைக்கு தன் தந்தையோடு வந்து விட்டான் சிவராஜா சிங்களப் பாடசாலையிலேயே படித்தான் சிவராஜா. மிகக் கெட்டிக்கார மாணவனாய் திகழ்ந்தான். திலக்கின் நெருங்கிய நண்பனானான்.

சிவராஜாவின் துணையுடன் திலக் சிறிதளவு தமிழ் பேசக் கற்றுக் கொணடான்.

மாலை வேளைகளில் பாடசாலை விளையாட்டு மைதானம், சுத்தாராமா விகாரையின் பெரிய அரச மரத்தடி, ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கூடும் கிராமச்சந்தை, இல்லாவிடில் சிவராஜாவின் தந்தையின் கடைவாசல் என்று மாறிமாறிப் பொழுது போக்குவார்கள்.

ஓ! எவ்வளவு சந்தோஷமான நாட்கள் அவை.

ஆனால்,

1958இன் இனக்கலவரத்தில் கடை எரிக்கப்பட்டு சிவராஜாவும் அவனின் தந்தையும் உயிருடன் எரிக்கப்பட்டது அந்தக் கொடூரமான சம்பவங்களை அடுத்து இடம் பெற்ற பொலிஸ் துப்பாக்கிச் சூட்டில், ஊராரால் மிக நேசிக்கப்பட்ட விகாரைப் பிக்கு இறந்தது.. சிவராஜாவின் மறைவால் உண்ணாமல், உறங்காமல் திலக் இரண்டு வாரங்கள் சுகவீனமுற்று இருந்தது எல்லாமே திலக்கின் நினைவில் முட்டி மோதின.

''நாங்கள் எங்கே போகின்றோம்...''

உதடுக்குள் வெறுப்புடன் முணுமுணுத்துக் கொண்டான்.

பழைய சம்பவங்களை நினைத்ததும் அவனின் முகம் இறுகியது. கண்களில் இருந்து இரு சொட்டுக்கண்ணீர் தெறித்தன அவசர அவசரமாக கண்களைத் துடைத்துக் கொண்டான். ''ஏய் திலக் . என்ன இது ..?'' கூறிக்கொண்டே சுமி கணவனின் நெற்றியை ஆதாரத்துடன் தன் கை விரல்களால் தடவி விட்டாள் .

''அது சரி, இந்த முறை லக்கியின் சுகவீனத்தைச் சாட்டாக வைத்து மூன்று நாள் லீவில் வந்தீர்கள். இனி எப்போ? இனி மறுபடியும் ஆறு மாதத்திற்குப் பின்பா?''

கவலையுடன் கேட்டாள் சுமி.

''ஒரு போர் வீரனைப் பார்த்து கேட்கும் கேள்வி இது அல்ல சுமி.''

திலக் அவசரமாக பதிலிறுத்தான்.

''டாடி, நீங்கள் விமானத்திலிருந்து குண்டு எங்கே எல்லாம் வீசுவீர்கள்?''

தந்தையின் முகவாயை தன் சிறிய கைகளால் தடவியபடியே கேட்டாள் லக்கி.

''ஓ! அதுவா புலிகள் எங்கே எல்லாம் இருக்கின்றார்களோ அங்கே எல்லாம் வீசுவேன்.

திலக்கின் குரலில் பெருமை

''வீடு, கட்டிடங்கள், கோயில்கள் எல்லாம் அழியுமா?''

இது நிமல்

''அப்படி என்றால் பாடசாலைகள்?''

சுரேனின் குரல் உயர்ந்தது.

''அதெல்லாம் பார்க்க முடியாது, மகனே''

''அப்படியென்றால் எங்களைப் போல் சின்னப்பிள்ளைகள் செத்துப் போவார்களே டாடி.'' லக்கி கேட்டாள் அவளின் கேள்வியில் துயர் தொனித்தது. பார்வையில் மிரட்சி தெரிந்தது. ''அதையெல்லாம் பார்த்தால் முடியுமா? அவர்கள் எல்லாம் பெரியவர்களாக வந்து எங்களையெல்லாம் இங்கே வந்து கொன்று விடுவார்களே மகனே.''!

''அனே டாடி! பவ் நேத ("அது பாவமில்லையா டாடி!'')

''ஏக்கொலண்ட பொம்ஸ் தாண்ட எப்பா டாடி'' (''அங்கையெல்லாம் குண்டு வீச வேண்டாம் டாடி!'') லக்கியின் குரலில் ஏக்கம், பரிதாபம் எல்லாமே இருந்தன.

''ஓகே! ஓகே! நீங்கள் மம்மிக்குத் தொந்தரவு தராமல் படிக்க வேண்டும். நான் இரண்டு வாரங்களில் வந்து விடுவேன்.'' கூறிக்கொண்டே இருக்கையை விட்டு எழுந்தான் திலக். எழுந்து மனைவியின் அருகில் வந்தான்.

''சுமி போய் வரவா?''

சுமி ஏதோ கூற விரும்பினாள். வார்த்தைகள் வெளிவரவில்லை. உதடுகள் மட்டும் துடித்தன.

''சுமி, உனக்கு மனம் சரியில்லை என்பது எனக்குப் புரிகின்றது எனக்கு லீவு எடுப்பது சிரமம் என்ற விடயம் உனக்கு நன்கு புரியும்.''

சுகவீனம் என்று பொய் கூறி, லக்கியின் பிறந்தநாளுக்கு வருவதற்கு நான் பட்டபாடு... லீவு என்றாலே எனது மேலதிகாரியின் முகம் கறுத்து விடுகிறதே! இயற்கையிலேயே கறுப்பான அவருடைய முகம் கோபம் வந்தால் கேட்கவா வேண்டும்?'' இப்படிக் கூறிவிட்டு பலமாகச் சிரித்தான் திலக். தன் கேலிப் பேச்சால் அந்த இறுக்கமான சூழ்நிலையைச் சற்றுத் தளர்த்த விரும்பினான். குனிந்து மனைவியின் நெற்றியில் இறுக்கமான ஒரு முத்தத்தைப் பதித்து விட்டு தொப்பியை எடுத்து மாட்டிக் கொண்டு வெளியே வந்தான்.

ஃ ஃ ஃ

வெய்யிலின் சூட்டிலும் பார்க்க உள்ளத்தில் சூடு அதிகமாகத் தவித்தது. அலுவலர்கள் மெஸ்ஸில் அமர்ந்திருந்தான் திலக்.

பொங்கும் நுரையுடன் இருந்த பியர் கிளாசை கையில் வைத்திருந்தபடியே தூரத்தே தன் பார்வையைச் செலுத்தினான்.

சதா இரைச்சலுடன் பறந்து திரியும் விமானங்களின் பயங்கரச் சத்தங்களையும், ஓயாமல் சீறிப் பாயும் எறிகணைகளையும் மௌனமாகக் கேட்டும், பார்த்தும் இருந்தபடியால் சோகத்துடன் காட்சியளிக்கும் தூரத்துப் பனங்கூடல்கள் வெய்யிலில் வாடி நிற்கின்றனவோ?

''என்ன திலக் பலமான யோசனை? இன்றைக்காவது இலக்குத் தப்பாமல் அடிப்பியா?'' கேலியுடன் எழுந்தது லியனகேயின் குரல்.

''திலக் சரியான இடத்தில் குண்டுகளை வீசினால் சூரியன் நாளைக்கு மேற்கேயல்லவா உதிக்கப் போகின்றான்!'' கூறிவிட்டு அட்டகாசமாகச் சிரித்தான். சில்வா.

''திலக் விமானமோட்டியாக நீடித்தால், போர் இன்னும் பத்து வருஷத்துக்கு நீடிக்கும்!''

மீண்டும் லியனகே.

''சட்அப்''

திலக் கோபத்தின் உச்சத்துக்குச் சென்றான்

அவனின் முகமெல்லாம் சிவந்து விட்டது.

மீதியிருந்த பியரை கடகட வென்று வாய்க்குள் ஊற்றிவிட்டு, சிகரெட்டின் அடித்துண்டை காலுக்குள் போட்டு சப்பாத்தினால் பலமாகத் தேய்த்தான்.

அவனின் சகாக்களைக் காலால் தேய்த்த திருப்தி.

மௌனமாக வெளியேறினான்.

ஃ ஃ ஃ

காற்றைக் கிழித்துக் கொண்டு பறந்தது அந்த இத்தாலியத் தயாரிப்பான சியாமா செட்டி குண்டுவீச்சு விமானம்.

ஏதேதோ வரைபடங்கள் திலக்கின் முன்னிலையில் இருந்தன.

சிவத்தக் குறியீடுகள், கறுத்த மையினால் அடையாளமிடப்பட்ட இடங்கள்.

குறிப்பிட்ட இடத்துக்கு மேலாக நாலுதரம் வட்டமிட்டான்.

கொக்குவில் சந்தி... கோண்டாவில் சந்தி... ரயில் பாதை எனக் குறித்த கோடு...

பெரிய குளமொன்றின் நீர் மதிய வெய்யிலில் பளபளத்தது. ஓங்கி வளர்ந்த கோயில் கோபுரம் துல்லியமாகத் தெரிந்தது. அதற்கு தெற்கால், கிழக்கால் நெருக்கமான குடியிருப்புகள் விமானச் சத்தத்தைக் கேட்டு மக்கள் அங்குமிங்கும் ஓடுவது தெரிந்தது. காலையில் தான் பார்த்த மனைவி சுமியின் சோகம் ததும்பும் முகம் தோன்றி மறைந்தது.

மகள் லக்கியின் முகம் தோன்றி மறைந்தது.

பிள்ளைகளின் கேள்விகள் காதில் ஒலித்தன.

ஒ! அது தான் இடம்.

தன் மனதை இறுக்கமாக்கிக் கொண்டான் திலக்.

சரியான இடத்தை கணித்துக் கொண்டு விமானத்தை கீழே இறக்க முற்பட்டான்.

படார்... படார்...

விமான எதிர்ப்புத்துப்பாக்கிகள் நாலு பக்கங்களிலிருந்து இயங்கின.

விமானம் மேலே எழும்பியது.

மீண்டும் வட்டமிட்டான்.

மறுபடியும் இடத்தை குறி வைத்து விமானத்தை இறக்க முற்பட்டான்.

மறுபடியும் கீழிருந்து தீப் பொறிகளுடன் ரவைகள் வானத்தை நோக்கிச் சீறின.

மீண்டும் விமானம் மேலெழுந்தது.

திலக் ஆத்திரப்பட்டான்.

இன்றும் இலக்குப் பிழைத்து விட்டதே...

ஆதங்கத்துடன் கூறிக் கொண்டான்.

''திலக் சரியான இடத்தில் குண்டுகளைப் போட்டால் சூரியன் நாளை மேற்கில் தானே உதிப்பான்.''

சில்வாவின் கேலிக்குரல்

நண்பர்களின் நக்கல் குரல்கள் மாறி மாறி நாராசமாக திலக்கின் காதுகளில். முட்டி மோதின.

'சாய், இப்படிக்கூறி விட்டார்களே ...?'

மனம் ஆத்திரப்பட்டது.

பொறுமை இழந்தான் திலக்

ஏதோ ஒரு வெறி அவனது உடல் எங்கும் பரவியது.

தன்னை மறந்த நிலையில் கைகள் இயங்கின.

இராட்சதக் குண்டுகளை கீழே தள்ளி விட்டு அந்த சியாமா செட்டி குண்டு வீச்சு விமானம் வானில் சென்று மறைந்தது.

ஃ ஃ ஃ

விமானச் சத்தத்தைக் கேட்டதும் காய்கறி விற்கும் பறுபதக் கிழவி ஒரு கணம் நின்று நிமிர்ந்து பார்த்தாள்.

''அறுவான் வந்திட்டான்... அம்மாள் ஆச்சி நீ தான் துணை!''

தலையில் இருந்தகடகத்தை கீழே போட்டு விட்டு, வேலி ஓரமாக குனிந்து படுத்துக் கொண்டாள். குண்டுகளை வீசிவிட்டு விமானம் சென்றதும், கடகத்தையும் தூக்கி கொண்டு ஓடினாள்.

சயிக்கிலில் இளைஞர்கள் ஓடினார்கள்,

(5ஆம் பக்கம் பார்க்க)

எமது உயர் கல்விப் பிரச்சினைகள்

பலதரப்பையும் கவர்ந்த

இந்த இயந்திரமயமான வாழ்க்கை எல்லாமே வெறுத்து விட்டது. பேசாமல் ஓய்வு பெற்று விட்டு கிராமத்துக்குப் போய் விடுவோமா என என் மனம் விரும்புவதை என்னால் தடுக்க முடியாமல் உள்ளது.''

பெருமூச்சுடன் திலக் திரும்பிப்படுத்தான்.

மாத்தறை நகரிலிருந்து உள்ளுக்குள், வளவை கங்கையின் அரவணைப்பில் உள்ள அழகான கிராமம் அது.

தன் சிறுவயதில் ஓடியாடிய இடங்கள், தன் இளமைக்கால நண்பர்கள் .. எல்லாமே அவனின் ஞாபகத்துக்கு வந்து ஓடி மறைந்தன.

மோதின.

''நாங்கள் எங்கே போகின்றோம்...''

உதடுக்குள் வெறுப்புடன் முணுமுணுத்துக் கொண்டான்.

பழைய சம்பவங்களை நினைத்ததும் அவனின் முகம் இறுகியது. கண்களில் இருந்து இரு சொட்டுக் கண்ணீர் தெறித்தன அவசர அவசரமாக கண்களைத் துடைத்துக் கொண்டான். ''ஏய் திலக் . என்ன இது ..?'' கூறிக்கொண்டே சுமி கணவனின் நெற்றியை ஆதாரத்துடன் தன் கை விரல்களால் தடவி விட்டாள்.

''டாடி, நீங்கள் விமானத்திலிருந்து குண்டு எங்கே எல்லாம் வீசுவீர்கள்?''

தந்தையின் முகவாயை தன் சிறிய கைகளால் தடவியபடியே கேட்டாள் லக்கி.

''ஓ! அது வா புலிகள் எங்கே எல்லாம் இருக்கின்றார்களோ அங்கே எல்லாம் வீசுவேன்.

திலக்கின் குரலில் பெருமை

''வீடு, கட்டிடங்கள், கோயில்கள் எல்லாம் அழியுமா?''

இது நிமல்

மிரட்சி தெரிந்தது. ''அதையெல்லாம் பார்த்தால் முடியுமா? அவர்கள் எல்லாம் பெரியவர்களாக வந்து எங்களையெல்லாம் இங்கே வந்து கொன்று விடுவார்களே மகளே.''!

''அனே டாடி! பவ் நேத (''அது பாவமில்லையா டாடி!'')

''ஏக்கொலண்ட பொம்பிஸ் தாண்ட எப்பா டாடி'' (''அங்கையெல்லாம் குண்டு வீச வேண்டாம் டாடி!'') லக்கியின் குரலில் ஏக்கம், பரிதாபம் எல்லாமே இருந்தன.

''ஓகே! ஓகே! நீங்கள் மம்மிக்குத் தொந்தரவு தராமல்

சதா இரைச்சலுடன் பறந்து திரியும் விமானங்களின் பயங்கரச் சத்தங்களையும், ஓயாமல் சீறிப் பாயும் எறிகணைகளையும் மௌனமாகக் கேட்டும், பார்த்தும் இருந்தபடியால் சோகத்துடன் காட்சியளிக்கும் தூரத்துப் பனங்கூடல்கள் வெய்யிலில் வாடி நிற்கின்றனவோ?

''என்ன திலக் பலமான யோசனை? இன்றைக்காவது இலக்குத் தப்பாமல் அடிப்பியா?'' கேலியுடன் எழுந்தது லியகேயின் குரல்.

''திலக் சரியான இடத்தில் குண்டுகளை வீசினால் சூரியன் நாளைக்கு மேற்கேயல்லவா உதிக்கப் போகின்றான்!''

தது. ஓங்கி வளர்ந்த கோவில் கோபுரம் துல்லியமாகத் தெரிந்தது. அதற்கு தெற்கால், கிழக்கால் நெருக்கமான குடியிருப்புகள். விமானச் சத்தத்தைக் கேட்டு மக்கள் அங்குமிங்கும் ஓடுவது தெரிந்தது. காலையில் தான் பார்த்த மனைவி சுமியின் சோகம் ததும்பும் முகம் தோன்றி மறைந்தது.

மகள் லக்கியின் முகம் தோன்றி மறைந்தது.

பிள்ளைகளின் கேள்விகள் காதில் ஒலித்தன.

ஓ! அது தான் இடம்.

தன் மனதை இறுக்கமாக்கிக் கொண்டான் திலக்.

சரியான இடத்தை கணித்

விமானச் சத்தத்தைக் கேட்டதும் காய்கறி விற்கும் பறுபதக் கிழவி ஒரு கணம் நின்று நிமிர்ந்து பார்த்தாள்.

''அறுவான் வந்திட்டான்... அம்மாள் ஆச்சி நீ தான் துணை!''

தலையில் இருந்தகடகத்தை கீழே போட்டு விட்டு, வேலி ஓரமாக குனிந்து படுத்துக் கொண்டாள். குண்டுகளை வீசிவிட்டு விமானம் சென்றதும், கடகத்தையும் தூக்கி கொண்டு ஓடினாள்.

சயிக்கிலில் இளைஞர்கள் ஓடினார்கள்,

(5ஆம் பக்கம் பார்க்க)

## எமது உயர் கல்விப் பிரச்சினைகள்

# வட இல. மருத்துவ கல்லூரி மாணவர் எதிர்நோக்கும் துன்பங்கள்

—அரசின் தரப்படுத்தல் கொள்கையால் பாதிக்கப்பட்டதன் காரணமாக 1985இல் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட வட இலங்கை மருத்துவக் கல்லூரியில் (NorthLankaMedical College) 135 மாணவர்கள் 'அனுமதி பெற்றார்கள். நான் முந்தி நீ முந்தி என்று போட்டி போட்டுக் கொண்டு ஒவ்வொரு மாணவரும் தலா ஒருலட்சத்து இருபத்தையாயிரம் கொடுத்துச் சேர்ந்து கொண்டார்கள் என்றால் ஆச்சரியப் படவேண்டாம் இதற்கு மேல் ஒரு தொகை கணக்குத்தன் தமிழ் நாட்டில் நடக்கிறது மாணவர்கள் வட்டாரத்தில் விசாரித்த போது மிக ஏழ்மையான நிலையில் உள்ள மாணவர்களும் கடன்பட்டு இந்தத் தொகையைக் கட்டினார்கள் என்று தெரிய வருகிறது. ஆசிரியர்களுக்குச் சம்பளம் ஆய்வு கூட வசதி, வேறு வசதிகளும் இந்தக் கட்டணத்திலிருந்து தான். மாணவர்கள், ஏதோ தாங்கள் M.B.B.S (மருத்துவர்) பட்டம் பெறலாம் என்ற நம்பிக்கையுடன்தான் சேர்ந்தார்கள். எல்லாமாக ஐந்து வருடக் கற்கை நெறி. ஆனால், இதில் விசேடம் என்னவென்றால், இவர்கள் எட்டு வருடங்களில் இரண்டாவது மருத்துவப் பரீட்சையில் 52 பேர் தோற்றி 49 பேர் மாத்திரம் தேறியுள்ளார்கள். இவர்களில் ஆறு பேர் பின்னர் விலகிக் கொண்டார்கள்.

— வட இலங்கை மருத்துவக் கல்லூரிக்குப் பிள்ளையார் சுழி போட்ட காலம் முதல் இன்று வரை பல சிக்கல்கள் இந்த விவகாரத்துக்குத் தீர்வு காண்பதற்குப் பதிலாக விவகாரம் அனுமான் வால் மாதிரி நீண்டு கொண்டே போகிறது. இதன் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டவர்களும் இது குறித்துப் பிரக்ஞை சற்றும் இல்லாமல் இருக்கிறார்கள். கல்வியைப் பற்றிக்காது புளிக்கக் கதைக்கும் பலரும் தனியார் கல்வியால் பிரயோசனமில்லை என்று ஒதுங்கி விலகலாக இருக்கலாம். (எதற்கும் விதிவிலக்குகள் இல்லாமலில்லை) பிரச்சினை கடந்த எட்டு வருடங்களாகத் தீர்க்கப்படாது நீடித்த காரணத்தால் சுமார் 83 மாணவர்கள், பெயரளவில் இயங்கும் வட இலங்கை மருத்துவக் கல்லூரியிலிருந்து இடை விலகிக் கொண்டார்கள். இடை விலகிக் கொண்டவர்களில் சிலர், நல்ல வசதி கிடைக்கும் என்று தொழில் வாய்ப்புகளைத் தேடிக் கொண்டார்கள். சிலர் வெளிநாடுகளில் மீதமுள்ள மாணவர்கள் படும் அவஸ்தை சொல்லத்தரமன்று. 'உயர் கல்வி அரசிய'லில் பகடையாகிவிட்ட இந்த மாணவர்களின் எதிர்காலம்என்னவோ என்று கண்கலங்க வைக்கின்றது. படிப்பைத் தொடரலாம் என்று இவர்கள் இந்தியாவை நினைத்துப் பார்க்கவும் முடியாது. உதாரணமாக, பெங்களூர் மருத்துவக் கல்லூரியில் நுழைவதற்குப் 14 லட்சம் ரூபா. அங்கும் இலங்கைத் தமிழ் மாணவர்களைச் சேர்ப்பதில் கல்லூரி நிர்வாகிகள் மெத்தனமாக இருக்கிறார்கள். பெங்களூர் மருத்துவக் கல்லூரியில் 10 சிங்கள மாணவர்களுக்கு அனுமதி கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இரண்டு தமிழ் மாணவர்களால்தான் இங்கு நுழைய முடிந்ததாம். தமிழகத்தில் நிலைமை இன்னும் மோசம்.

— அமைதியாக இருந்த வட இலங்கை மருத்துவக் கல்லூரி நிலைமை திசை திரும்பி மோசமாகக் காரணம் என்ன? சிறீலங்கா அரசு எத்தகைய உருப்படியான திட்டத்தையும் முன் வைக்காமல், யாழ் குடாநாட்டின் கல்விச் சூழலைக் குழப்பும் நோக்கத்துடன் வட இலங்கை மருத்துவக்கல்லூரியைத் தக்க வைத்தது. 1989ல் அரசு சட்டத்தில் திருத்தம் செய்து தமிழ் மாணவர்களை இந்தக் கல்லூரிப் பக்கம் எட்டிப் பார்க்காமலே செய்தது. ஆனால் தென்னிலங்கையில் இதேபோல் ஆரம்பிக்கப்பட்ட தனியார் மருத்துவக் கல்லூரியில் கல்வி பயின்ற சுமார் 650 சிங்கள மாணவர்களையும் சிறிலங்கா அரசு களனிப் பல்கலைக் கழகத்தில் சேர்த்துள்ளது என்றால் பாருங்களேன். அவர்களில் ஒரு பகுதியினர் பட்டம் பெற்று வெளியேறித் தென்னிலங்கையில் வைத்தியர்களாகச் சேவையாற்றுகிறார்கள்.

> வடக்கு - கிழக்குப் பகுதியில் சிறிலங்கா அரசின் ஆட்சியின் விளைவாக கல்வியில் நெருக்கடிகளும், சிக்கல்களும் முற்றியுள்ளன. இன்று நிலைமை உச்சக்கட்டமாகியுள்ளது. இந்நிலையில், உள்ள வளங்களை எமக்கிடையில் சமநிலை குன்றாமல் உபயோகிக்க எமதுமனப்பாங்கை மாற்றுவது அவசியமாகின்றது.
>
> **மதன்**

— பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு என்ற மையப்படுத்தப் பட்ட அமைப்பின் (Centeralised Organisation) மூலம் தமிழ் மக்களின் கல்வி உரிமையை நசுக்கும் முறையே இது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் ஒவ்வொரு செயலுக்கும் பின்னால் ஒரு அரசியல் தங்கியுள்ளது. என்பதினை 1992 ஏப்ரல் க. பொ. த (உயர்தர) விசேட பரீட்சை வெட்டுப் புள்ளி முறையே காட்டுகிறது.

— சிங்கள தனியார் மருத்துவ கல்லூரி மாணவர்களை இயந்திர கதியில் பல்கலைக்கழகத்தில் சேர்த்துக் கொண்ட உயர் கல்வியமைச்சு, வட இலங்கை மருத்துவக் கல்லூரி மாணவர்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தைத்தவிர வேறு எந்த மருத்துவ பீடத்திலும் சேர்ப்பதில்லை என்று ஒற்றைக்காலில் நிற்கிறது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் இதற்கு ஒத்தூதுகிறது.

— யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மருத்துவ மாணவர் ஒன்றியத்தின் எதிர்ப்பை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வெகு சாமர்த்தியமாகப் பயன்படுத்தியுள்ளது. தமிழர்கள் என்பதால் வட இலங்கை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் சுமார் 43 பேரும் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில்தான் அனுமதிக்கப் படவேண்டும் என்று ஆணைக்குழு அழுத்தம் கொடுத்து வருகிறது இதே வேளை, யாழ்.மருத்துவ பீடத்திற்குத் தேவையான ஆசிரியர்களின் எண்ணிக்கையைவிட நான்கில் ஒரு பகுதிக்குக் குறைவாகவே உள்ளனர் என்பதினை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு கவனத்தில் எடுத்துக்கொள்ளவில்லை. அது குட்டையைக் குழப்பி விட்டு மீன்பிடிக்கப் பார்க்கிறது.

### மருத்துவபீட மருத்துவ மாணவர் ஒன்றிய

--யாழ் பல்கலைக் கழக மருத்துவ பீடத்துடன் வட இலங்கை தனி

(5ஆம் பக்கம் பார்க்க)

## பலதரப்பையும் கவர்ந்த கணனி இலத்திரனியல் கண்காட்சி

எமது வளங்களின் உச்சப் பயன்பாடு. ஒன்றிணைந்து முயற்சிக்கும்போது தான் திறம்பட வெளிப்படுத்தப்படுகிறது. அவ்வகையில், 10, 11, 12 என மூன்று தினங்களாக யாழ் பல்கலைக் கழகத்தில் இடம்பெற்று வரும் கணனி இலத்திரனியல் கண்காட்சியும் அமைந்துள்ளது. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் யாழ். பல்கலைக் கழகம், கணனி கல்வி நிலையங்கள் என்பன இணைந்து நடாத்தி வரும். இக் கண்காட்சி, எமது சமூகத்திற்கு கணனி பற்றியும் அதன் பயன்கள் பற்றியும், அறியும் ஆவலை ஏற்படுத்த அறிவுத் தேடலை ஆரம்பித்து வைத்துள்ளது.

கணனி இலத்திரனியல் பற்றிய அறிமுகப் பகுதியில் கணனியின் தந்தையெனப்படும் சார்ள்ஸ் பபேஜ் கணனி உலகின் முதலாவது நிகழ்ச்சித்திட்ட தயாரிப்பாளர் எனப்படும் அடா லவ்லேஸ் சீமாட்டி என கணனியின் ஸ்தாபகர்கள் பற்றிய விளக்கஉரைகளுடன், கணனியின் அடிப்படை இலத்திரனியல் தொழிற்பாடுகளும் விளக்கப்படுகின்றன. 200 நிகழ்ச்சித் திட்டங்களை தன்னகத்தே கொண்ட இலத்திரனியல் சாதனமொன்றும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. சிறிய உருவமைப்பும், சிறுபிள்ளை கூடகையேடுகளின் வழிநடத்தலில் கையாளக் கூடிய இலகுத்தன்மையும் இதன் சிறப்பியல்புகளாகும்.

கணனியின் பிரயோகங்களை கருதின், நவீன உலகில் கணனியின் வித்தியாசமான தேவைகள் பற்றியும் விளக்கமளிக்கபடுகிறது. சாதாரண அலுவலக உபயோகம் முதல் பரிமாறும் றோபேட், கண்ணி வெடிகளை அகற்றும் சாதனம் வரை கணனிகளின் பிரயோகங்கள் பற்றிய படங்களுடனான விளக்கங்கள் தரப்படுகின்றன.

சிறுவர்களுக்கான கணனி விளையாட்டுக்கள் பெருமளவில் ஆர்வமூட்டுவனவாக உள்ளன. கணனி பற்றிய வாய்ப்புகள் குறைந்த எம் பிரதேசத்தில்வாழும் மாணவர்களை இப்பகுதி பெருமளவில் கவர்ந்தது. விரும்பிய பாடல்களை, ஆங்கில இசை வடிவங்களினூடாக பதிவு செய்து விரும்பிய நேரத்தில், விரும்பும் பாடலை, குறுகிய நேரத்துள் கேட்பது முதல் சின்னஞ் சிறார்களுக்கான, பேசும் கணனி என இப்பகுதி அமைகிறது.

போக்குவரத்து வீதி ஒழுங்குகளை மேற்கொள்ளும் வர்ண விளக்குகளின் (Traffic Lights) கணனி கட்டுப்பாட்டிலான தொழிற்பாடும் பலரைக் கவர்கிறது. கணனிகளினூடு வடிவமைக்கப்படும் விளம்பரங்கள் தகவல் நிரற்படுத்தும் பிரிவுகளில் உபயோகமான தகவல்களை அட்டவணைவடிவில்புள்ளிவிபரவடிவில்பதிவு செய்துவேண்டியநேரத்தில் பெற்றுக்கொள்ளும் வகைகளில் கணனிகளின் பயன்களும் விளக்கமளிக்கப்படுகின்றன. கணனியின் கட்டுப்பாட்டிலமையும் புகையிரதப் போக்குவரத்தின் மாதிரியொன்றும் அமைக்கப் பட்டுள்ளது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

பின்வரும் பதவிகளுக்கும் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

1. நுண்கலைகள் / தமிழ் / பொருளியல் / வர்த்தக / வியாபார நிருவாகப் பேராசிரியர்.
2. கல்வியில் / தமிழில் / மொழியியலில் / வர்த்தக முகாமைத்துவப் படிப்புக்களில் / சித்தமருத்துவத்தில் சிரேட்ட விரிவுரையாளர் தரம் I / சிரேட்ட விரிவுரையாளர் தரம் II / விரிவுரையாளர் (தகுதிகாண்) / உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்)
3. மெய்யியலில் / நாடகமும் அரங்கக்கலைகளில் தற்காலிக உதவி விரிவுரையாளர்.
4. நுண்கலைகளில் தற்காலிக கட்டுரை ஆசிரியர்.

தயவு செய்து குறித்துக் கொள்க:

கல்வியில் சிரேட்ட விரிவுரையாளர் தரம் I / சிரேட்ட விரிவுரையாளர் தரம் II / விரிவுரையாளர் (தகுதிகாண்) / உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்)

பின்வருவோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

அ) பட்டமட்டத்தில் வரலாற்றை ஒரு பாடமாகக் கொண்டுள்ளோருக்கும் பட்டப்பின் மட்டத்தில் கல்வித் தத்துவத்தைக் கற்பிக்கக் கூடியவர்களாகவும், பட்டப்பின் மட்டத்தில் இந்துசமயத்தைக் கற்பிக்கக் கூடியவர்களுக்கும்.

ஆ) பட்டத்திற்கு ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கொண்டிருப்பவர்களுக்கும்

இ) ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாக கற்பித்தல் பற்றி கல்வியில் பட்டப்பின் டிப்ளோமாவைக் கொண்டிருப்போர் / அல்லது கல்வியில் பட்டப்பின் டிப்ளோமாவுடன் முறையியலுக்கு ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கொண்டுள்ளோருக்கும்.

வர்த்தக முகாமைத்துவ படிப்புகளில் சிரேட்ட விரிவுரையாளர் தரம் I / சிரேட்ட விரிவுரையாளர் தரம் II / விரிவுரையாளர் (தகுதிகாண்) / உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்).

பின்வருவோருக்கு முன்

துறைத் தலைவரினதும் பீடத்தலைவரினதும் ஓராண்டுத் திருப்திகரமான சேவையை நிறைவு செய்துள்ளாரென அத்தாட்சிப் படுத்தப்பட்ட உதவி விரிவுரையாளருக்கு (தகுதிகாண்) விரிவுரையாளர் (தகுதிகாண்) என பதவிப்பெயர் அளிக்க முடியும் என்பதுடன் அவரைத் துணைவேந்தர் ரூபா 6,050-10 × 250 - 8550/- மாதமொன்றுக்கு, சம்பள அளவுத்திட்டத்தில் வைக்கலாம்

முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு (மேற்பிரிவு) பட்டதாரிகள் நிலையான சம்பளத்தில் ஓராண்டுக்கு உதவி விரிவுரையாளராகப் பணிபுரியவேண்டிய தேவையிலிருந்து விலக்களிக்கப்பட்டு விரிவுரையாளர் (தகுதிகாண்) தரத்திற்கு சேர்த்துக் கொள்ளப்படுவர். இச் சம்பள அளவுத் திட்டம் 1994 01-01 ஆம் தேதியிலிருந்து செயற்படுத்தப்படும்.

தற்காலிகக் கட்டுரையாளர் பதவிக்கு வெளியிடப்பட வேண்டிய பெறுபேறுகளின் அடிப்படையில் நியமிக்கப்பட்டோர் அவர்களின் பெறுபேறுகள் வெளியீடப்படும் வரை 1993.12 31வரை 3,660/- (நிலையான) மாதாந்த சம்பளத்தில் வைக்கப்படுவதுடன் 1994-01 01 தொடக்கம் ரூபா4,100 /-(நிலையான) மாதாந்தச் சம்பளத்தில் வைக்கப்படுவர்.

1993 ஆகஸ்ட் 3ஆம்தேதி 579ஆம் இலக்க ஆணைக் குழுவின் சுற்றுநிருபத்திற்கு ஏற்ப நிரந்தரப் பதவிகளுக்கான சம்பள அளவுத் திட்டங்கள் 1994 சனவரி 1ஆம் தேதியிலிருந்து முழுமையாகச் செயற்படும். இத்துடன் தற்காலிகப் பதவியினருக்கும், நிரந்தரப் பதவியினருக்கும் நிலுவையிலுள்ள வேலை நிறைவேற்றுப் படியாக 1994 திசெம்பர் 31 ஆம் தேதி வரை சம்பளத்தின் 25 சதவீதத்திற்கு சமமான தொகை செலுத்தப்படும்.

1993 மே 12ஆம் தேதிய 9/93 இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப மாதாந்தப்படியாக 600/- ரூபா செலுத்தப்படும்.

இத்துடன் "புத்தகப்படியாக" ஒவ்வொருவருக்கும் ஓராண்டுக்கு 10,000/- ரூபா காலாண்டுத்தவணைப் பணங்களாக ஒவ்வொரு காலாண்டின் ஆரம்பத்திலும் செலுத்தப்படும் 1994-01-01 தொடக்கம் நிரந்தரப் பதவியினருக்குச் செலுத்தப்பட வேண்டிய படி ஆண்டுக்கு 10,000/- ரூபாவுடன் வருடாந்த

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளின் சிறப்புத் தகைமைகளையும் அல்லது அனுபவங்களையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத் திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்
1993-11-05
(சி-7894)

பலதரப்பையும்

தமிழில் எழுத்துக்கள் கணனித்திரையில் உண்டுபண்ணப்படும் நிகழ்ச்சித் திட்டம் வரவேற்கப் படவேண்டிய ஒன்று இலத்திரனியல் கணனி தொழிநுட்பத்தின் வளர்ச்சியில், குறைந்த நேரத்தில் எமக்கு தேவையானவற்றை தன் நினைவுப் பகுதியிலிருந்து தரும் திறன் என பல்வகையான செயற்பாடுகளையும் காணக்கூடியதாயிருந்தது.

எவ்வகையில் பார்க்கினும், நவீன உலகே கணணிமயமாக்கலின் சிகரங்களுக்கு செல்லும் இன்றைய நிலையில் எமது வளங்களை கொண்டே, கணனிகள் பற்றிய அடிப்படை அறிவினை எமது சமூகத்திற்கு வழங்கமுன் வந்த இக்கண்காட்சி பெரிதும் பாராட்டுக்குரிய தொன்றே.

- ரகுராம்

ஏழை மக்கள் மீது

# பாரிய சுமையை ஏற்றும் வரவு - செலவு திட்டம்

— எதிர்க்கட்சிகள் கண்டனம்

சிறிலங்கா பாராளுமன்றத்தில் வெளியிடப்பட்டவரவுத் செலவு திட்டத்தில் பொது மக்கள் மீது பாரிய சுமைகளை தற்போதைய அரசாங்கம் மேலும் சுமத்தியுள்ளதாக எதிர்க்கட்சி தலைவர்கள் கருத்து தெரிவித்துள்ளார்கள்.

நாட்டில் ஏற்பட்டு செல்லும் பணவீக்கத்தினையும் இதனைத் தொடர்ந்து செல்லும் விலைவாசியை கருத்திற் கொள்ளாது செய்யப்பட்ட வரவு செலவு திட்டம் இது என்றும் வர்த்தகரையும், தொழில் அதிபர்களை மட்டும் இவ் வரவு செலவு திட்டம் உற்றுநோக்கியிருப்பதாக எதிர்க்கட்கி தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.


அல்டி - ALDI

தீபாவளி மலிவு விற்பனை
நவம்பர் 1-ம் திகதி முதல் நவம்பர் 12-ம் திகதி வரை

★ சகல விதமான கைக்கடிகாரங்கள்,
★ சுவர்மணிக் கூடுகள்

முதலியன மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

நம்பிக்கையானது! உத்தரவாதமுடையது!

அல்டி
269/1 மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/7861)



அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எங்கள் அன்பு கனிந்த
தீபாவளி நல்வாழ்த்துக்களை
தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

★ சகலவிதமான மின்சார,
★ மின்னியல் உபகரணங்களை

சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் திருத்திப் பெற்றுக்கொள்ள,

கரசன் எலெக்றிக்கல்ஸ்-
அன் எலெக்ரோனிக்ஸ்
இல. 4, J. M. C. பில்டிங்,
அர்ச்சுனா வீதி,
யாழ்ப்பாணம்.
(இ-7879)



தமிழீழத்தின் புதிய அத்தியாயம்!

அழகிய வர்ணப் படங்களை காலாகாலத்திற்கு நிலைத்து நிற்க சிறந்த முறையில் சட்டமிட்டு அமைத்துக் கொடுக்கும் முன்னணி நிறுவனம்.

★ படமாடம் ★

சகல விதமான
❋ பூக்கண்ணாடி
❋ சாதாரண கண்ணாடி
❋ அலுமினிய இணைப்புக்கள்
❋ சாமிப்படங்கள்
❋ இனிப்பு கண்ணாடிப்பெட்டிகள்
❋ மீன் தொட்டிகள்

ஆகியவற்றை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளவும் மற்றும் சகலவிதமான படங்களை சட்டமிட்டுப் பெற்றுக்கொள்ளவும் நாடவேண்டிய.

ஒரே ஸ்தாபனம்

படமாடம்
அர்ச்சுனா வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/7890)



மீண்டும் யாழ்நகரில்
றொலெக்ஸ் ஸ்தாபனத்தாரின்
தேன் சிந்தும் ஐஸ்கிறீம்
வகைகள்!

ஸ்பெசல் ஐஸ்கிறீம் புறூட் சலட் ஐஸ்கிறீம்
சொக்லட் ஐஸ்கிறீம், வனிலா ஐஸ்கிறீம்
மற்றும் சர்பத், கிறீம் சர்பத், ஐஸ் கோப்பி
அனைத்து குளிர்பான வகைகளுக்கும், சுவைமிகு
கோழிப்புரியாணி வகைகளுக்கும் மீண்டும்

★ உங்களை அழைக்கின்றார்கள் ★

"ஹொட்டல் றொலெக்ஸ் ஸ்தாபனத்தார்"

ஹொட்டல் றொலெக்ஸ்
340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(இ-7867)

பிக்கக் கூடியவர்களாகவும், பட்டப்பின் மட்டத்தில் இந்துசமயத்தைக் கற்பிக்கக் கூடியவர்களுக்கும்.

ஆ) பட்டத்திற்கு ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கொண்டிருப்பவர்களுக்கும்

இ) ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாக கற்பித்தல் பற்றி கல்வியில் பட்டப்பின் டிப்ளோமாவைக் கொண்டிருப்போர் / அல்லது கல்வியில் பட்டப்பின் டிப்ளோமாவுடன் மொழியியலுக்கு ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கொண்டுள்ளோருக்கும்.

வர்த்தக முகாமைத்துவ படிப்புகளில் சிரேட்ட விரிவுரையாளர் தரம் 1/ சிரேட்ட விரிவுரையாளர் தரம் 11/ விரிவுரையாளர் (தகுதிகாண்) / உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்).

பின்வருவோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

அ) வியாபாரப் பொருளியல்.

ஆ) கணிதம், கணனியியலுடன் மிகவும் விரும்பத்தக்கது.

இ) வங்கியியலும், காப்புறுதியும்.

இவற்றுடன் தொடர்புடைய துறைகளைச்சேர்ந்த அபேட்சகர்களும் கவனிக்கப்படுவர்.

**சம்பள அளவுத்திட்டம்**

பேராசிரியர் :-
ரூபா 16,100-6×400-18,500/-மாதமொன்றிற்கு.

சிரேட்ட விரிவுரையாளர் தரம் 1 :-
ரூபா 12,725-8×325-15,325 மாதமொன்றிற்கு.

சிரேட்ட விரிவுரையாளர் தரம் 11 :-
ரூபா 10,650-5X325-12,275 மாதமொன்றிற்கு.

விரிவுரையாளர் (தகுதிகாண்)
ரூபா 6,050-10X250-8,550 மாதமொன்றிற்கு.

உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்) /
ரூபா 4,585/- (நிலையானது) மாதமொன்றிற்கு. 1993.12.31 வரை.

தற்காலிக உதவி விரிவுரையாளர்
ரூபா 5,270/- (நிலையானது) மாதமொன்றிற்கு. 1994 01.01 தொடக்கம்.

தற்காலிக கட்டுரை ஆசிரியர் .-
ரூபா 3,835/- (நிலையானது) மாதமொன்றிற்கு. 1993-12-31 வரை.
ரூபா 4,420/- (நிலையானது) மாதமொன்றிற்கு. 1994-01-01 தொடக்கம்.

...ருக்கும் நிலுவை ... வேலை நிறைவேற்றுப் படியாக 1994 டிசெம்பர் 31 ஆம் தேதி வரை சம்பளத்தின் 25 சதவீதத்திற்கு சமமான தொகை செலுத்தப்படும்.

1993 மே 12ஆம் தேதிய 9/93 இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப மாதாந்தப்படியாக 600/- ரூபா செலுத்தப்படும்.

இத்துடன் ''புத்தகப்படியாக'' ஒவ்வொருவருக்கும் ஓராண்டுக்கு 10,000/- ரூபா காலாண்டுத்தவணைப் பணங்களாக ஒவ்வொரு காலாண்டின் ஆரம்பத்திலும் செலுத்தப்படும். 1994-01-01 தொடக்கம் நிரந்தரப் பதவியினருக்குச் செலுத்தப்பட வேண்டிய படி ஆண்டுக்கு 10,000/- ரூபாவுடன் வருடாந்த அடிப்படைச் சம்பளத்தினதும் வருடாந்த நிலுவையிலுள்ள பணி நிறைவேற்றப் படியினதும் 10 சதவீதமாகும்.

பட்டதாரி ஒருவர் அல்லது இறுதிப் பட்டத் தேர்வின் பெறுபேறுகளுக்காகக் காத்திருக்கும் ஒருவர், தற்காலிக உதவி விரிவுரையாளர் பதவிக்கும் தற்காலிகக் கட்டுரை ஆசிரியர் பதவிக்கும் விண்ணப்பத்திற்கு உரித்துடையவராவர்.

**விண்ணப்ப முடிவு திகதி:**

1. தற்காலிக உதவி விரிவுரையாளர்/தற்காலிக கட்டுரையாளர் பதவி- 1993-12-10
2. பேராசிரியர்- 1994-01-31
3. இதர பதவிகள்- 1993-12-10

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்களையும் ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திற்கும் 20/- ரூபாவை நிதிக் கிளையில் செலுத்திய பின்னர் இப்பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப்பதிவாளர் (தாபனக்கிளை) அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும் விபரங்களையும் பெறவிரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் பதிவாளர்/நிதியாளர் பெயரில் பெறப்பட்ட 20/- ரூபா பெறுமதியான காசுக் கட்டளை/தபாற்கட்டளையுடன் 23×10 ச. மீ அளவுடையசுய முகவரியிட்டு1/- முத்திரை யொட்டப்பட்ட கடிதஉறையை அனுப்புதல் வேண்டும்

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் அந் நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்


சகல விதமான ❋ பூக்கண்ணாடி
❋ சாதாரண கண்ணாடி
❋ அலுமினிய இணைப்புக்கள்
❋ சாமிப்படங்கள்
❋ இனிப்பு கண்ணாடிப்பெட்டிகள்
❋ மீன் தொட்டிகள்

ஆகியவற்றை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளவும் மற்றும் சகலவிதமான படங்களை சட்டமிட்டுப் பெற்றுக்கொள்ளவும் நாடவேண்டிய.

ஒரே ஸ்தாபனம்

**படமாடம்**

அர்ச்சுனா வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/7890)

தேன் சிந்தும் ஐஸ்கிறீம் வகைகள்!

ஸ்பெசல் ஐஸ்கிறீம் புறூட் சலட் ஐஸ்கிறீம் சொக்லட் ஐஸ்கிறீம், வனிலா ஐஸ்கிறீம் மற்றும் சர்பத், கிறீம் சர்பத், ஐஸ் கோப்பி அனைத்து குளிர்பான வகைகளுக்கும், சுவைமிகு கோழிப்புரியாணி வகைகளுக்கும் மீண்டும்

★ உங்களை அழைக்கின்றார்கள் ★

''ஹொட்டல் றொலெக்ஸ் ஸ்தாபனத்தார்''

**ஹொட்டல் றொலெக்ஸ்**

340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-7867)

இளமைக்கு அழகேற்றி அழகுக்கு மெருகூட்டும் அழகிய கண்கவர் 22ct தங்க நகைகளை ஓடர் செய்து பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்

# நியூ லலிதா ஜுவல்லர்ஸ்

திருமணஓடர் நகைகளை ஒரே இடத்தில் உங்கள் வசதிக்கேற்ற முறையில் விலை நிதானத்துடன் செய்து பெற்றுக்கொள்ளவும், பழைய பவுண் பொன், வெள்ளி ஆகியவற்றை கூடிய விலையில் விற்கவும் நீங்கள் நாடவேண்டிய இடம்





**தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்**

அன்றைய நாளிலும் இன்றைய சூழ்நிலையிலும் உங்களின் தேவை அறிந்து சேவை செய்பவர்கள்

# நியூ லலிதா ஜுவல்லர்ஸ்

74/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-7891)

யாழ்ப்பாணம்

# தி.மு.க விற்குள் மீண்டும் ஒரு ஒக்டோபர் புரட்சி!

சரித்திரத்துக்குச் சில தேதிகள் மீது ஆசை அதிகம் போலும்! இருபது ஆண்டுகளுக்கு முன்பு தி.மு. கழகத்திலிருந்து எம்.ஜி.ஆர் வெளியேற்றப்பட்டது- அக்டோபர் மாதத்தில் தான்! 'கணக்கு எங்கே?'' என்று கேட்டுக் கழகத்தில் அக்டோபர் 8-ம் திகதியன்று புரட்சித் தலைவர் புரட்சி செய்தார்! அக்டோபர் 10-ம் திகதியன்று எம்.ஜி.ஆரின் வெளியேற்றம் நடந்தது.

சரித்திரம் திரும்புகிறது. கழகத்தில் மீண்டும் அக்டோபர் புரட்சி! இப்போதைய அக்டோபர் 10ஆம் திகதிக்கும் முக்கியத்துவம் ஏற்பட்டது. தி.மு.க 10-ம் திகதியன்று நடத்தும் முப்பெரும் விழாவுக்குப் பிறகு 'தீவிர அரசியலில் இருந்து விலகுவேன்' என்று கலைஞர் அறிவிப்பு விடுமளவுக்கு (பிறகு வாபஸ் பெற்றாலும்) கட்சியில் பிளவு ஏற்பட்டது.

வியாழக்கிழமை மாலை தனது ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் வை.கோ. நேரடியாகப் பதில் சொல்லிய பிறகு மனம் தளர்ந்தார் கலைஞர் என்று 'அறிவாலயம்' சொல்கிறது. டெல்லியில் இருந்த மாறனுடன் பேசிய பிறகு இப்படி ஒரு முடிவு எடுக்கத் துணிந்தார் என்கிறார்கள். 1977 தேர்தலில் தி.மு.க படுதோல்வியடைந்த போது 'தி.மு.க தலைவர் பதவியிலிருந்து கலைஞர் விலக வேண்டும்' என்ற கோரிக்கை கிளம்ப, அப்போது ஒருமுறை ராஜினாமா செய்வதாக அறிவித்தது உண்டு. இக்குளிப்புகள் தொண்டர்கள் அழுகைக்குப் பிறகு அது வாபஸ் ஆனது!

வை.கோ. விவகாரம் வாரிசுப்போராக மாறியவுடன், தானே களத்தில் இறங்கினார்கலைஞர். துரதிர்ஷ்டவசமாக அவர் விட்ட கணைகள், சினிமா பாணியில் - பூச்சரங்களாக மாறி வை. கோ. கழுத்தில் விழுந்தது அதிசயம் தான்!

'வை. கோபால்சாமிக்கு ஆதரவு தெரிவிக்கும்' விதத்தில் கலைஞரைத் தீர்த்துக்கட்ட விடுதலைப்புலிகள் திட்டமிட்டு இருக்கிறா'ர்கள் என்ற உளவுத்துறையின் ஊர்ஜிதமற்ற செய்தியைக்கருணாநிதி சொந்தக் கருத்து எதுவும் சொல்லாமல் நிருபர்களிடம் வெளியிட்டார். வை கோ. வை வீழ்த்தும் பிரமாஸ் என்று இது சொல்லப்படுகிறது! ஆனால், இதுவும் புஸ்வாணம்ஆகிவிட்டது.. தொண்டர்கள் நம்பவில்லை.. விசித்திரம்தான்'' என்கிறார் மாவட்டச் செயலாளர் ஒருவர்!

''கலைஞர் மீது தொண்டர்களுக்குப் பாசம் உண்டு. அதே நேரத்தில் வை.கோ. மீது நம்பிக்கையிருக்கிறது. இந்தக் குற்றச்சாட்டை தொண்டர்கள் நம்பாத அதிர்ச்சிதான் கலைஞரை அரசியல் ஓய்வு' என்ற அதிர்ச்சி வைத்திய அறிவிப்பைத் தரச்செய்திருக்கிறது என்கிறார். இவர் வை. கோ. வட்டாரம் - கலைஞரின்ஓய்வு அறிவிப்பை ஒருநாடகமாகவே கருதியது, தொண்டர்களைத் திசை திருப்பும் முயற்சி என்கிறார்கள் வை. கோ. ஆதரவாளர்கள்.

அதற்கு முதல்நாள்முழுவதும் தமிழ் அறிஞர்கள் சிலர் மூலம் சமரச முயற்சிகள் ஓசைப்படாமல்நடந்தன வியாழக்கிழமை இரவு கலைஞர் தன் முடிவைப் பத்திரிகைகளுக்கு அறிவித்த அதே நள்ளிரவு நேரத்தில், வைரமுத்துவும், பாரதிராஜாவும் வை கோ. வைச் சந்தித்துப் பேசினர். கோபாலபுரம் தூதர்களாக! விடியற்காலை மூன்று மணிவரை பேசி, திரும்பிச் சென்றார்கள் வெறுங்கையோடு.

வை. கோவை. கட்சியை விட்டு நீக்குவதற்கு மூன்று முறை நடந்த முயற்சிகள் தோல்வியில் முடிந்திருக்கின்றன. அவரது தம்பி ரவிச்சந்திரன் விடுதலைப் புலிகள் ஆதரவாளராக 'தடாவில்' கைதான சமயத்தில் ஒருமுறை! நாஞ்சில் மனோகரன் விவகாரத்திலும் இவரே அசல் குறி! கடைசியாக இப்போது

உண்மையில், கலைஞருக்கு வை. கோ. என்றால் இனித்த நாட்கள் உண்டு, கலைஞர் மீது அளப்பரிய பற்றுக் கொண்டவர்தான் வை.கோ.வும்! இருவரிடையே வெறுப்பு வளர்ந்தகதை-ஒரு விறுவிறுப்பான அரசியல் சுவை கொண்டது. நீண்டது அதன் ஒரு சில பக்கங்களைப் படித்தாலே உண்மைகள் புரிந்து விடலாம்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு கலைஞர் - வை கோ. இருவரும் பிரிக்க முடியாத தலைவரும் தொண்டரும்ஆவார்கள் தி.மு.கவெற்றிபெற்ற1989-ம் ஆண்டு தேர்தலுக்கு வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்க தன்னோடு சரிசமமாக வை. கோவை உட்கார வைத்தார் கலைஞர். கேள்விகளை அவரையே கேட்க வைத்தார். வை. கோ. முகத்தில் பெருமிதம் பொங்குவதை எல்லோரும் பார்த்தார்கள்! தேர்தல் பணிச் செயலாளராக வை. கோ!





இடையே தலையிட்டவர், வேறுபாட்டை வளர்த்தவர் என்று வை. கோ. ஆதரவாளர்கள் சுட்டிக்காட்டுவது முரசொலி மாறனை ''இப்படியெல்லாம் சரிசம அந்தஸ்து தரக்கூடாது என்று மாறன் தடுத்தார்'' என்கிறார்கள்.

இந்தியா டுடேயின்'நியூஸ்ட்ராக்' என்ற வீடியோ செய்தி நிறுவனம்,அந்தச்சமயம் தமிழ்நாட்டுத் தேர்தல் நிலைவரத்தை 'கவர்' செய்தது. எல்லா கட்சித் தலைவர்களையும் அதன் நிருபர்கள் பேட்டி கண்டனர். தி. மு. க. தலைவர்கள் யாரும் அதற்குப் பேட்டி தரவில்லை ''நேரம் இல்லை'' என்று தட்டிக்கழித்தார்கள். அந்த நிருபர்கள் வை. கோ வைச் சந்திக்க, அவர் பேட்டி கொடுத்தார் 'தி. மு. க. வெற்றி பெறும்' என்று அவரது அழுத்தமான பேட்டி பரபரப்பு ஏற்படுத்த மாறன் - வை. கோ - வை அழைத்து ''எதற்கு நீங்கள் பேட்டி தருவது?'' என்று கேட்டார். அடுத்து வை.கோ. வை கலைஞரும் கடுமையாகக் கண்டித்தார்! 'அதிகப் பிரசங்கி' என்ற பட்டமும் கிடைத்தது.

இது தான் ஆரம்பம்,

அந்த தேர்தலின் போது நெல்லை மாவட்ட நிதியளிப்பு கூட்டம் நடந்தது. அதில் வை. கோ. பேசும் போது ''நான் எமர்ஜென்சியில் சிறை சென்ற போது மோதிரத்தைக் கழற்றி வைத்தேன். அதன் பின் இன்றுவரை விரலில் மோதிரம் அணிவதில்லை இத்தேர்தலில் வெற்றிவாகை சூடி, வெற்றி விழா நடக்கும் போது வெற்றி பெற்றதற்கு அடையாளமாகத் தலைவர் என் கைகளில் கணையாழி அணிவிக்க வேண்டும்'' என்றார். தேர்தல் பணிச் செயலாளர் என்ற முறையில் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

தேர்தலில் தி.மு.க வென்றது. வெற்றி விழா கூட்டம் நடந்தது. கடுமையாக உழைத்ததற்காகப் பலரிற்கு பொன்னாடை போர்த்தப்பட்டது. ''ஆனால், பம்பரமாக சுழன்று பணியாற்றிய வை. கோவுக்கு முதல் அவமானம் இங்கே நடந்தது. சம்பந்தமில்லாதவர்களுக்குப்பொன்னாடைபோர்த்தியவர்கள் வை. கோ-வுக்கு ஒரு சிறு பூமாலையை மார்கழி மாத பஜனைக்காரர்களுக்குப் போடுவது போல கழுத்தில் அணிவித்தார்கள். வை. கோ. முகம் வாடியது'' என்றார் அவர் நண்பர்.

அந்தக் கூட்டத்தில் பேச்சாளர்கள் வை. கோ. வின் பெயரை உச்சரித்த போது, ஜெயித்து வந்த எம். எல். ஏக்களின் பலத்த கைதட்டல்! இது பற்றி பிறகு ''எல்லா வேட்பாளர்களையும் வை. கோ. தேர்ந்தெடுத்ததாகக் கருத வேண்டாம்! அவர் மாவட்டத்துக்காரர்களை மட்டுமே தேர்ந்தெடுத்தார்'' என்று காரணமின்றி கலைஞர் குறிப்பிட்டபோது, வை.கோவின் முகம் மீண்டும் வாடியது. எம். எல். ஏக்களை இவ்வாறு உஷார் படுத்த வேண்டிய அவசியமென்ன என்று அவருக்குப் புரியவில்லை!

அதற்குப் பிறகு, கலைஞர்- வை.கோ தொடர்புமெதுவாக வாடஆரம்பித்தது! கட்சியில் அடுத்த தலைவர் யார்? என்ற வாரிசுப் போர் ஆரம்பித்தவுடன்நிலைமை மோசமடைந்தது. மு. க. ஸ்டாலின் ஒரு புறம் மேலிட ஆதரவுடன் கம்பீரம் பெற, வை. கோ. வளர்ச்சி அவருக்குத் தடையாக இருக்கும் என்ற கருத்து வலுப்பெற, இன்னும் விறுவிறுப்பான காட்சிகள் நடந்தன...

சோகம் நிறைந்த இந்தக் கதையின் உச்சக் கட்டம்தான் எல்.டி.டி ஈ யுடன் தொடர்பு படுத்திய குற்றச்சாட்டு இந்தப் புதிய கொலைக் குற்றச்சாட்டு வை.கோவை மிகவும் துடி துடிக்க வைத்துவிட்டது. இனி போராடுவது என்ற முடிவுக்கு வந்துவிட்டார்! விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை. அதனால் தான் கலைஞரின் 'ஓய்வு' அறிவிப்பு வந்தவுடன் அவர் தலைமறைவானார். ''சமரசம் என்ற பேச்சுக்கு இடமில்லை. முரசொலி மாறனைக் கட்சியை விட்டு நீக்குவார்களா?சமரசம் பற்றிப் பேசலாம்'' என்று அவரது நண்பர்கள் ஆணித்தரமாகச் சொன்னார்கள்.

(தமிழக வார சஞ்சிகை ஒன்றிலிருந்து)

---

அடையாற்றில் மறைவிடத்தில் இருந்த அனல்கக்கும் ராஜ்சபா எம் பி இந்தியா ருடே செய்தியாளர் பிரகாஷ் எம். ஸ்வாமிக்கு வழங்கிய பேட்டியிலிருந்து.

கே: தற்போதைய சர்ச்சைக்கு யார் காரணம் என்று நினைக்கிறீர்கள்?

ப: சந்தேகமில்லாமல் ஸ்டாலின், அழகிரி, முரசொலி மாறன் ஆகியோர் தான் காரணம். கட்சியுடனும், கட்சித் தலைவருடனும் எனக்குள்ள நெருக்கம் கண்டு இவர்களுக்குப் பொறாமை என்னைத் தம்பியாக எண்ணி பாசம் காட்டிய கருணாநிதியின் மனதை இவர்கள் கெடுத்துவீட்டார்கள்.

கே: கருணாநிதியைக் கொலை செய்ய புலிகள் திட்டம் தீட்டி இருக்கிறார்களா?

ப: திட்டமெல்லாம் தி.மு.க தலைமை அலுவலகத்தில் தான் தீட்டப்பட்டிருக்கிறது' யாழ்ப்பாணத்தில் அல்ல. இந்தச் செய்தி கட்சியில் உள்ள சுயநல சக்திகள் கட்டிவிட்ட கதை. 4 மாதத்திற்கு முன்பே இதற்கான திட்டம் தொடங்கிவிட்டது. முன்னாள் டி.ஜி.பீயான வி.ஆர். லக்சுமி நாராயணன் கூட புலிகளின் சதி எதுவும் கிடையாது என்று கூறியிருக்கிறார்.

கே: தலைமையைக் கைப்பற்ற நீங்கள் முயல்வதாக குற்றம் சாட்டப்படுகிறதே?

ப: என் தலைவர் உயிரோடும் ஆரோக்கியத்தோடும் இருக்கும் போது அடுத்த தலைவருக்கான பிரச்சினை எங்கே வந்தது? என்னை வளர்த்து ஆளாக்கிய ஒரு காலத்தில் என்னைத் தனது போர்வாள் என்று குறிப்பிட்ட கருணாநிதியுடன் நான் போட்டி போடவில்லை. இன்று நான் ஒரு சி. ஐ ஏ ஏஜெண்ட். சதிகாரன், துரோகி என்றெல்லாம் சொல்கிறார்கள். நான் கட்சியில் எந்தப் பதவிக்கும் ஆசைப்பட்டதில்லை. பொதுக் கூட்டங்களில் ஸ்டாலின் தன்னை முன்னிறுத்திக் கொள்வதுபோலவா நான் செய்கிறேன்.

கே: உங்களுக்கேற்பட்ட அவப்பெயரைப் போக்கிக்கொள்ள என்ன செய்ய போகிறீர்கள்?

ப: கட்சித்தலைமை இந்தப்பிரச்சினையைப் பொதுக்குழுவின் முன் வைக்கட்டும். அப்போதுதான் இரு தரப்பு வாதங்களையும் கேட்க முடியும். நாஜி கொலைகாரர்களுக்குக் கூட தங்கள் தரப்புவாதத்தை முன்வைக்கச் சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டது. ஆனால் எனக்குக் கொடுக்கப் படவில்லை.

கே: உங்களுக்கு விடுதலைப் புலிகளுடன் இன்னமும் தொடர்பு உள்ளதா?

ப: நான் தமிழீழத்தை ஆதரிக்கிறேன். ஆனால் விடுதலைப்புலிகளுடன்தொடர்பு இருப்பதாகக் கூறப்படுவதை திட்டவட்டமாக மறுக்கிறேன். எனது கட்சி தமிழீழத்தை ஆதரித்தபோது நான் பிரபாகரனை சந்தித்தேன். தடைசெய்யப்பட்ட ஒரு இயக்கத்துடன் எனக்குத் தொடர்பு இருப்பதாகக் குற்றஞ்சாட்டி என்னை தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைதுசெய்வதற்காக மத்திய அரசுடனும் அதன் உளவு அமைப்புடனும் சேர்ந்துகொண்டு முரசொலிமாறன் சதி செய்கிறார் என்று நான் குற்றம் சாட்டுகிறேன்

கே: இ காங்கிரசுடன் கூட்டணி ஏற்படுத்திக்கொள்ள திமுக முயல்வது உண்மையா?

ப: ஆம். நான் அப்படித்தான் நினைக்கிறேன். சில மாதங்களிற்கு முன்பு ஒரு பொதுக்கூட்டத்தில் இ காங்கிரஸை நான் கடுமையாக விமர்சித்தபோது அக்கட்சியுடன் உறவு ஏற்படக்கூடிய வாய்ப்புகளை நான் கெடுப்பதாக ஆற்காடு வீராசாமி குற்றஞ்சாட்டினார். முரசொலி மாறன் டில்லியில் சுப்பிரமணியம் சுவாமியைச் சந்தித்து இக்கூட்டணிக்கான சாத்தியக்கூறுகள் பற்றிப் பேசினார்.

---

## டா. இல. மருத்துவ

யாழ் மருத்துவக் கல்லூரி இணைத் ... குமார் நம்மிடம் சொல்ல விரும்ப ... எஸ். தொண்டமானுடன் பேசியதன் விளைவாக அவர் டாக்டர் ஸ்ரீபன் அறிக்கையைத் தூசி படிய விடாமல் ... — பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வட இலங்கை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் சம்பந்த ...

## எதிரொலி

''எங்கை மோனை போட் ...

கையில் பியர் கிளாஸ். உத ...

தானே களத்தில் இறங்கி னார்கலைஞர். துரதிர்ஷ்டவச மாக அவர் விட்ட கணைகள், சினிமா பாணியில் - பூச்சரங்க ளாக மாறி வை. கோ. கழுத் தில் விழுந்தது அ தி ச ய ம் தான்!

'வை. கோபால்சாமிக்கு ஆதரவு தெரிவிக்கும்' விதத் தில் கலைஞரைத் தீர்த்துக் கட்ட விடுதலைப்புலிகள் திட்டமிட்டு இருக்கிறார்'கள் என்ற உளவுத்துறையின் ஊர் ஜிதமற்ற செய்தியைக்கருணா நிதி சொந்தக் கருத்து எதுவும் சொல்லாமல் நிருபர்களிடம் வெளியிட்டார். வை கோ. வை வீழ்த்தும் பிர மாஸ் என்று இது சொல் லப்படுகிறது! ஆனால், இது

திரள் விடுதலைப் புலிகள் ஆத ரவாளராக டைகர்ஸ்' கை தான சமயத்தில் ஒருமுறை! நாஞ்சில் மனோகரன் விவ காரத்திலும் இவரே அசல் குறி! கடைசியாக இப்போது!

உண்மையில், கலைஞருக்கு வை. கோ. என்றால் இனித்த நாட்கள் உண்டு. கலைஞர் மீது அளப்பரிய பற்றுக் கொண்டவர்தான் வை.கோ. வும்! இருவரிடையே வெறுப்பு வளர்ந்தகதை-ஒரு விறுவிறுப் பான அரசியல் சுவை கொண் டது. நீண்டது அதன் ஒரு சில பக்கங்களைப் படித்தாலே உண்மைகள் புரிந்து விடலாம்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு கலைஞர் - வை கோ. இருவ

தொடங்கிவிட்டது. முன்னாள் டி.ஐ.ஜி யான வி.ஆர். லக்ஷமி நாராயணன் கூட புலிகளின் சதி எதுவும் கிடையாது என்று கூறியிருக்கிறார்.

கே: தலைமையைக் கைப்பற்ற நீங்கள் முயல்வதாக குற்றம் சாட்டப்படுகிறதே?

ப: என் தலைவர் உயிரோடும் ஆரோ க்கியத்தோடும் இருக்கும் போது அடுத்த தலைவரைக்கான பிரச்சினை எங்கே வந் தது? என்னை வளர்த்து ஆளாக்கிய ஒரு காலத்தில் தனது போர் வாள் என்று குறிப்பிட்ட கருணாநிதியு டன் நான் போட்டி போட வில்லை. இன்று நான் ஒரு சி. ஐ. ஏ ஏஜெண்ட். சதிகாரன், துரோகி என்றெல்லாம் சொல் கிறார்கள். நான் கட்சியில் எந்தப் பதவிக் கும் ஆசைப்பட்டதில்லை. பொதுக் கூட் டங்களில் ஸ்டாலின் தன்னை முன்னிறுத்

தற்காக மத்திய அரசுடனும் அதன் உளவு அமைப்புடனும் சேர்ந்துகொண்டு முரசொலிமாறன் சதி செய்கிறார் என்று நான் குற்றம் சாட்டுகிறேன்.

கே: இ காங்கிரசுடன் கூட்டணி ஏற் படுத்திக்கொள்ள தி மு க முயல்வது உண் மையா?

ப: ஆம். நான் அப்படித்தான் நினைக் கிறேன். சில மாதங்களிற்கு முன்பு ஒரு பொதுக்கூட்டத்தில் இ காங்கிரஸை நான் கடுமையாக விமர்சித்தபோது அக்கட்சி யுடன் உறவு ஏற்படக்கூடிய வாய்ப்பு களை நான் கெடுப்பதாக ஆற்காடு வீரா சாமி குற்றஞ்சாட்டினார். முரசொலி மாறன் டில்லியில் சுப்பிரமணியம் சுவாமி யைச் சந்தித்து இக்கூட்டணிக்கான சாத் தியக்கூறுகள் பற்றிப் பேசினார்.

குடி, வெற்றி விழா நடக்கும் போது வெற்றி பெற்றதற்கு அடையாளமாகத் தலைவர் என் கைகளில் கணையாழி அணிவிக்க வேண்டும்'' என் றார். தேர்தல் பணிச் செய லாளர் என்ற முறையில் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

தேர்தலில் தி.மு.க வென் றது. வெற்றி விழா கூட்டம் நடந்தது. கடுமையாக உழைத் ததற்காகப் பலரிற்கு பொன் னாடை போர்த்தப்பட்டது. ''ஆனால்,பம்பரமாக சுழன்று பணியாற்றிய வை. கோவுக்கு

டுக் கொடுக்கத் த யா ரா க இல்லை. அதனால் தா ன் கலைஞரின் 'ஒய்வு' அறி விப்பு வந்தவுடன் அவர் தலை மறைவானார். ''ச ம ர ச ம் என்ற பேச்சுக்கு இடமில்லை. முரசொலி மாறனைக் கட்சி யை விட்டு நீக்குவார்களா?சம ரசம் பற்றிப் பே ச லா ம்'' என்று அவரது நண் ப ர் க ள் ஆணித்தரமாகச் சொன்னார் கள்.

(தமிழக வார சஞ்சிகை ஒன்றிலிருந்து)

## வட இல. மருத்துவ

யார் மருத்துவக் கல்லூரி இணைத் தால் மேலதிக மூன்று வருடப் படிப்பை முடித்துக்கொண்டு அவர் கள் வைத்தியர்களாக வெளியேறும் வாய்ப்பும் உருவாகும் இதற்கான தடைகளில் ஒன்று யாழ் மருத்துவ பீட மாணவர்களின் எதிர்ப்பாகும். கலைப்பீடம், விஞ்ஞானபீடம் மற்றும் மருத்துவ பீடத்தில் தனியார் மருத் துவ மாணவர்களுக்கு ஆதரவாக உள் ளவர்கள் -- அவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் அதேவேளை, யாழ் மரு த்துவபீட மாணவர்களின் ஆதரவும் தேவை என்று கருதுகிறார்கள். இன் னும் சிலர் பாம்புக்கு வாலும் மீனுக் கும் தலையும் காட்டுகிறார்கள்.

வட இலங்கை மருத்துவக் கல் லூரி மாணவர்களில் பல்கலைக்கழக அனுமதிக்கு எதிரான மருத்துவபீட மாணவர்களின் கருத்துகளும் இங்கு நோக்குதற்குரியன. இந்த மாணவர் களை அனுமதிப்பதன் மூலம் மருத் துவப்பயிற்சி (Clinicalwork) பாதிக் கப்படுவதோடு, ஏலவே தறுக்கணித்த நிலையில் உள்ள கற்கைநெறி மேலும் இழுபடலாம் என்று அச்சம் தெரிவிக் கப்படுகிறது. இந்தச் சுயநிதிக்கல் லூரியை எதிர்ப்பதற்கு ஒரு சமுதா யத்தன்மையும் காரணமாகச் சொல் லப்படுகிறது. இந்தக் கருத்துக்களின் சாரமாக மூன்று விடயங்கள் மருத்துவ மாணவர் ஒன்றியத்தால் வலியுறுத்தப் படுகிறது அவையாவன:-

- வட இலங்கை மருத்துவக் கல் லூரியை ஆதரிப்பதில்லை.
- யாழ் பல்கலைக் கழகத் து ட ன் வட இலங்கைப் பல்கலைக்கழ கத்தை இணைப்பதில்லை.
- வட பகுதியில் உள்ளஎந்த வைத் தியசாலையையும் வட இல ங்கை மருத்துவக் கல்லூரி உப யோகிக்கக் கூடாது.

— இது குறித்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ். கிருஷ்ணகுமாரை அவரது அலுவலக த்தில் சந்தித்து விபரம் கேட்டபோது-

''வார இறுதியில் கூட்டம் கூடிப் பேசி ஒரு முடிவை எடுக்கவுள்ளோம்'' என்று இரு வாரங்களின் முன் பதில ளித்தார். குறிப்பிட்டுச் சொல்லும்படி யாக எந்தப் ப தி லை யு ம் கிருஷ்ண குமார் நம்மிடம் சொல்ல விரும்ப வில்லை.

### நடந்த சம்பவங்கள்

1987 - பல்கலைக்கழக மானிய ங்கள் ஆணைக்குழு யாழ் பல்கலை க்கழக மருத்துவபீட ஆசிரியர்க ளை உறுப்பினராகக் கொண்ட குழு ஒன்றை நியமித்தது. இக் குழு பல அம்சங்களையும் ஆராய் ந்து 2-ஆம் M.B.B.S திருப்திகர மானது என்று பரிந்துரைத்தது.

1988 - முக்கியமான விடயம் நடைபெற்றது. 1988 இல: 45 விதி அமுலாக்கப்பட்டு வட இல ங்கை மருத்துவர் சபை பட்டங் கள் வழங்கவும், கல்லூரியை நிர் வகிக்கவும் அனுமதி அளிக்கப்பட் டது.

1989 - தனியார் மருத்துவக் கல்லூரி மேற்கொண்டும் இயங்க முடியாதபடி சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டது. இருதய சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ். ஜே. ஸ்ரீபன் குழு அறிக்கை மட் டக்களப்பு வைத்தியசாலையைப் போதனா வைத்தியசாலையாக்கு தல். வட இலங்கை மருத்துவக் கல்லூரி ஆசிரியர்களையும், மாண வர்களையும் கிழக்கு பல்கலைக் கழகத்துக்கு மாற்றுதல், 3-வது M. B. B. S. கற்கை நெறியைத் தொடர்தல்.

1990 - லலித் அத்துலத்முதலி உயர்கல்வி அமைச்சராக இருந்த போது மாணவர்கள் பரீட்சைக்கு அழைக்கப்பட்டனர். ஆனால் பரீ ட்சை பிற்போடப்பட்டது.

1991 ஜூன் - உயர்கல்விஅமை ச்சினால் பரீட்சை பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் நடத்தப்பட் டது. வழக்கத்துக்கு மாறாக ஐந்து மாதங்கள் கழித்து செயன்முறை பரீட்சை.

இதன் பிறகு அரசு எதையும் செயற்படுத்தாமல் வீணாகக் காலத் தைத் தாழ்த்தியது. வட இலங்கை மருத்துவக் கல்லூரி மாணவர்களின் எதிர்காலம் குறித்து சிலர் அமைச்சர் எஸ். தொண்டமானுடன் பேசியதன் விளைவாக அவர் டாக்டர் ஸ்ரீபன் அறிக்கையைத் தூசி படிய விடாமல் செயல்படுத்துவதே பயன் தரும் என்று கூடுமானவரை முயற்சித்தார்.

13 ஜூலை 1993- பிரதமர் ரணில் விக்கிரமசிங்காதலைமை யில்அமைச்சரவை உபகுழுமீளவும் டாக்டர் ஸ்ரீபன் தலைமையில் ஒரு குழுவை நியமித்தது. வட இலங்கை மருத்துவக் கல்லூரியை எதிர்நோக்கும் பிரச்சினைகளும் கிழக்கிலங்கை பல்கலைக் கழகத் தில் மருத்துவபீடம் நிறுவுவது பற்றியும் பரிந்துரைக்கும் படி பணிக்கப்பட்டது.

ஸ்ரீபன் குழு கிழக்கில் மருத்துவ பீடத்தை நிறுவும் சாத்தியப்பாடுகள் இல்லை என்று பரிந்துரைத்ததுடன் வட இலங்கை மருத்துவக்கல்லூரி மாணவர்கள் யாழ் பல்கலைக் கழக த்தில் 3ஆவது M B.B.S. கற்கை நெறி யைத் தொடரும்படியும் சிபார்சு செய்தது.

5, ஒக்ரோபர் 1993 இல் அமை ச்சரவை உபகுழு கூடி வட இலங்கை மருத்துவக் கல்லூரி மாணவர்களின் எதிர்காலம் குறித்து ஆராய்ந்த சம யம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத்தலைவர்கடிதம்ஒன்றை ச்சமர்ப்பித்தார். 1993-09-03 திகதி யிட்டயாழ் பல்கலைக் கழக மருத்துவ மாணவர் ஒன்றியத்தால் எழுதப்பட் டது. இக்கடிதம் பல சர்ச்சைகளைக் கிளப்பியதாகத் தெரிவிக்கப்படுகிறது. இக்கடிதத்தின் பிரதியொன்றைக் கொழும்பில் பார்வையிட்ட ஒருவர் யாழ்ப்பாணத்திலுள்ள நண்பர் ஒரு வருக்கு இவ்வாறு எழுதுகிறார் ''கடிதத்தைப் பார்த்த சிங்கள தமிழ் அதிகாரிகள், அரசியல் வாதிகள் ஆச் சரியமும் வியப்பும் தெரிவிக்கிறார் கள். அவர்களை வடக்கு ஏற்காவிடில் தெற்கு ஏற்றுக் கொள்ளுமா என்றும் கேட்கிறார்கள்?'' இவ்வகையான எதிர்ப்புக் கடிதங்கள் ஏலவே உலக சுகாதார ஸ்தாபனத்துக்கும் (W. H. O.) சிலரால் அனுப்பிவைக் கப்பட்டுள்ளதாக நம்பகரமான வட் டாரத்தினர் தெரிவிக்கின்றனர்.

— பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வட இலங்கை மருத்து வக் கல்லூரி மாணவர்கள் சம்பந்த மான முடிவை யாழ் பல்கலைக்கழக உபவேந்தருக்கு விரைவில் அனுப்பி வைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த முடிவானது இறுதி முடிவாக இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படு கிறது.

— வடக்கு - கிழக்குப் பகுதியில் சிறிலங்கா அரசின் ஆட்சியின் விளை வாக கல்வியில் நெருக்கடிகளும், சிக்க ல்களும் முற்றியுள்ளன. வேறெப், போதையும்காட்டி இன்று நிலைமை உச்சமாகியுள்ளது, எனவே பாரம்பரியம் தனித்துவம் கல்வி வளம் போன்றவற்றிற்கு முக் கியத்துவம் கொடுப்பதன் மூலம் மருத் துவ பீட மாணவர்கள் தமிழ் மாண கர்களில் ஒரு பகுதியினரைப் புறக் கணித்து விடுவது தமிழ் சமூகத்துக்கு பயன் தரப்போவதில்லை. தமிழரின் கல்வி அமைப்பில் அரசு சிக்கல்களை யும் அழுத்தங்களையும் ஏற்படுத்தும் போது உள்ள வளங்களை எமக்கிடை யில் சமநிலை குன்றாமல் உபயோகிக்க எமது மனப்பாங்கை மாற்றுவது அவசியமாகிறது. அல்லது உத்தரா யண புண்ணிய காலம் வரும் வரை வட இலங்கை மருத்துவ கல்லூரி மாணவர்கள் மௌனமாகக்காத்திருக்க வேண்டுமா?.

— மேலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு 200 மாணவர்களை அனுமதிக்கக் கூடிய வளம் இருந்தும், 60 மாணவர் களை அனுமதிக்கவே பல்கலைக் கழக மானியங்கள் குழுதீர்மானித்துள்ளது. இதனையும் கல்விமான்கள் விமர்சித் துள்ளார்கள். இதிலும் தமிழ் மாணவர் களின் உரிமை மறுக்கப்பட்டிருக்கிறது. இந்த வரலாற்று நிர்ப்பந்த காலத்தில் உயர் கல்வி சம்பந்தமாக உள்ள வளங் களை பயன்படுத்தக்கூடிய முன் யோசனையான முடிவு எடுக்கப்படா விட்டால், தமிழ் மாணவர்களுக்குக் கல்வி எட்டாக்கனியாகவே மாறி விடும்.

## எதிரொலி

''எங்கை மோனை போட் டவன்?''
பறுபதக் கிழவியின் கேள்வி எழுந்தது.

''நந்தாவில் அம்மன்கோவி லடியிலை ஆச்சி.''
கூறிக் கொண்டே ஒருவன் சயிக்கிலில் விரைந்தான்.

ஆலும், அரசும், மகிழ மர மும் சூழ நின்று நிழல் பரப் பிய அந்த அழகிய கோயில் வாசல் சுடுகாடாகக் காட்சி அளித்தது. மரங்கள் கொப்பு கள், இலைகள் யாவற்றையும் இழந்து விட்டு அமங்கலமாக நின்றன.

கோயில் வாசலில் அடைக் கலம் தேடிய மூன்று பெண்ம ணிகள், நர்சரிப் பாடசாலை மழலைகள் மூவர், யாரோ ஒரு வழிப்போக்கர்

எல்லாருமே உடல் சிதறி ரத்தமும் சதையுமாய் ..
''ஐயோ என்ரை நந்தாவி லானே...

உள்ளுக்குள்ளை நீயிருக்கவோ இது நடந்தது?''
பறுபதக்கிழவி கோயில் வாசலை நோக்கிக் கதறி னான்.

''அறுவான் குண்டைப் போட்டு இந்தக் குஞ்சு குரு மானை எல்லாம் சாகடிச்சுப் போட்டானே!

இவனுக்குப் பிள்ளையள் இல்லையோ
தலையிலை இடிவிழாதோ ''
அவளின் புலம்பல் ஓயவி ல்லை.

ஃ ஃ ஃ

இரவின் இருட்டை ரியூப் லைற் வெளிச்சம் கலைத்துக் கொண்டு நின்றது.

கறுத்தக்கழுசானும், பச்சை ரீ சேட்டுமாய் காட்சியளித் தான் திலக்.

கையில் பியர் கிளாஸ். உத ட்டில் சிக்ரெட் புகைத்தது.

விமானப்படை உயர் அதிகா ரிகள் மூலைக்கு மூலை நின்று உரையாடிக் கொண்டு நிற்கி ன்றனர்.

மூலையில் இருந்த மேசை யில் ரெலிபோன் அலறியது.

ஒரு அதிகாரி ஓடிச் சென்று ரீசிவரை எடுத்தார்.

சம்பாஷணை நீண்டது.

அவரின் முகம் இறுகியது.

ரிசீவரை ஒருபக்கம் வைத்து விட்டு மெதுவாக நடந்து வந் தார்.

''திலக், உனக்கு .. உனக்கு ஒரு Sad News

திலக் கிளாசுடன் ஓடினான்

''பாவம் திலக், இன்று மாலை அவனது மூன்று பிள் ளைகளும், மனைவியும் வீதி யைக் கடக்கும்போது பெரிய வாகனம் மோதி மூன்று பிள் ளைகளும் அதிலேயே இறந்து விட்டார்களாம்! மனைவியும் ஆபத்தான நிலையிலாம் ..!

ஒரு கணம் அந்த அதிகாரி கள் மெஸ் கணிசமான மௌன த்தைத் தழுவிக் கொண்டது. கலகலப்பு யாவும் மறைந்து விட்டன.

''ஓ! மை கோட்''
திலக் அலறியது மற்றவர்க ளின் இதயத்தைத் தொட் டது.
கிளாஸ் கீழே வீழ்ந்துநொரு ங்கியது. ரிசீவர் மேசையில் உருண்டது.
கீழே விழப்போன திலக்கை இரண்டு அதிகாரிகள் கைத் தாங்கலாகப் பிடித்துக்கொண் டனர்.

ஃ ஃ ஃ

## உங்களின் தேவையே எங்களின் நிறைந்த சேவை

- T. V வீடியோ டெக், ரேடியோ, எலக்ரோனிக் மணிக்கூடுகள், எலக்ரோனிக் கல்குலேற்றர்கள் மற்றும் எல்லாவித எலக்ரோனிக் உபகரணங்கள் எவேஜன்சி லைற் பற்றறிகள் புதிய முறையில் உத்தரவாதத்துடன் திருத்திக்கொடுக்கப்படும்.
- எல்லாவிதமான பற்றறிகளும் சார்ஜ் செய்து கொடுக்கப்படும்
- வீடியோ படப்பிடிப்பு, ஒளிவீச்சு, குடும்பத்துடன் பார்த்து மகிழக் கூடிய தணிக்கை செய்யப்பட்ட சினிமா, வீடியோப்படங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
- புதிய புரட்சி பாடல்கள், தத்துவப்பாடல்கள், சினிமாப்பாடல்கள், ஹிந்தி, ஆங்கிலப் பாடல்கள் சிறந்த முறையில் பதிவு செய்து கொடுக்கப்படும்.

இன்றே விஜயம் செய்யுங்கள்

## நியூ விக்ரேஸ் எலெக்ரோனிக் கொம்பிளெக்ஸ்

05, B M. C. ஒழுங்கை, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-7898)



Our Courteous Service to your door Step your favourite Newspapers and Periodicals

NEWS CARRIERS
GAJAN GROUP

48, Adiyapatham Road,
Thirunelvely South,
Jaffna.

(8544)


## 45-ம் நாள் நினைவஞ்சலி



| தாயின் மடியில் | | தாயக மண்ணில் |
|---|---|---|
| 26 | | 29 |
| — | | — |
| 09 | | 09 |
| — | | — |
| 1975 | | 1993 |

### லெப்டினன்ட் இளமுருகன்

[ஐயாத்துரை-அன்பழகன் (குகன்)]

1-ம் வட்டாரம், புங்குடுதீவு

புலோப்பளையில் 29-09-93-ல் வீரச்சாவை அடைந்த லெப்டினன்ட் இளமுருகனின் நினைவாக...

மண்ணில் பிறந்தாய்
மகிழ்ந்தனர் பெற்றோர்
அன்புடன் இருந்தாய்
அணைத்தனர் சகோதரர்
அறிவுடன் வளர்ந்தாய்
ஆதரித்தனர் சுற்றமுள்ளோர்
நேர்மையுடன் நின்றாய்
தேசப் பற்றாளனாய்
இன்மொழி பேசியன்பா
இணைந்தாய் இயக்கத்தில்
அணிந்தாய், துயரம் விட்டாய்
களம்பல கண்டு
பெரும்புகழ் படைத்து
புலோப்பளைச் சமரில்
புகழுடல் சரித்தாய்
லெப்டினன்ட் ஆனாய்
நிலமகள் உறிஞ்சிய - உன்
செங்குருதியுடன் எண்மரின்
செங்குருதியிலிருந்தும் பிறப்பான்
ஆயிரம் புலிவீரன்
அண்ணன் வழி பின்பற்றி
அடைவோம் தமிழீழம்
அதுவே எமது இறுதிமொழி.

**காலம்:- 12-11-93 வெள்ளி**

**இடம் :- கனகசபை வீதி, மானிப்பாய்.**

(சி-7912) — குடும்பத்தினர்


### பதப்படுத்திய பலாப்பழம்

நன்கு முற்றிப் பழுத்த பலாப்பழச் சுளைகளை சீனிப்பாணியில் பதப்படுத்தப்பட்டு விற்பனைக்கு வந்துள்ளது. அதே சுவை, அதேமணம் இன்றே வாங்குங்கள்.

ரேஸ்ட்லைன் இன்டஸ்றீஸ் (தனி) லிமிட்டட்
14, சீனியர் ஒழுங்கை யாழ்ப்பாணம்.

(சி 7920)


## 45-ம் நாள் நினைவலைகள்



### கப்டன் ஈசன் (சேரன்)

(நடராசா சர்வேஸ்வரன்)

(புலோப்பளைச் சமர்)

| பிறப்பு | வீரச்சாவு |
|---|---|
| 9- 12- 197? | 29- 9- 1993 |

விதையாகித் தமிழீழ மண்ணைக் காத்தாய்
பதைத்த என் வயிறதனால் அமைதி காணச்
சதையில்லை என் சர்வேஸ்வரன் ஈசன்
புதையாத எரியாத உயிர்ச்சேரன்
நிறைவாகத் தமிழீழம் எவரும் நின்று
இறையாக வீர அருள் பொழிந்து காப்பான்
மறையாத மாவீரன் தனையே பெற்றேன்
குறையில்லைப் புலிபடுத்த குகை என் வயிறே.

உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து எமது புண்பட்ட மனதைப் பல வழிகளிலும் ஆறுதல்படுத்திய அனைவருக்கும் நன்றியறிதலைத் தெரிவித்து 12-11-93 இன்றுவெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கும் வீட்டுக்கிருத்தியத்திலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கும்.

குடும்பத்தினர்

## 45ஆம் நாள் நினைவு இதய நெருடல்கள்

துன்னாலை

and Periodicals

NEWS CARRIERS GAJAN GROUP

48, Adiyapatham Road,
Thirunelvely South,
Jaffna.

(6544)

செங்குருதியிலிருந்தும் பிறப்பான்
ஆயிரம் புலிவீரன்
அண்ணன் வழி பின்பற்றி
அடைவோம் தமிழீழம்
அதுவே எமது இறுதிமொழி.

காலம்:- 12-11-93 வெள்ளி

இடம் :- கனகசபை வீதி, மானிப்பாய்.

(சி-7912) — குடும்பத்தினர்

# 45 ஆம் நாள் நினைவு இதய நெருடல்கள்

துன்னாலை தெற்கில்
மலர்வு: 09 — 07 — 1971
தமிழீழ மண்ணுக்காய் உதிர்வு: 29 — 09 — 1993



## மேஜர் செந்தூரன்

(பிரேம்நாத்)

**சிதம்பரப்பிள்ளை சிவரூபன்**

(அசோகன்)

முன்னாள் வடமராட்சி சிறப்புத் தளபதியும்,
கனரக ஆயுதப் பொறுப்பாளரும் பயிற்சி ஆசிரியரும்,
ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவனும்

நம் தடம் பதிந்த தமிழ்த் தாயக மண்ணில்
எதிரி தன்தடம் பதிக்க விடோமென்று
புகுந்தீர்கள் களத்திலுன் போர்க்கோலம் கொண்டு
ஓடினர் எதிரிகள் உம் வீரம் கண்டு

துன்னாலை வடக்கில்
மலர்வு 21 11 1971
தமிழீழ மண்ணுக்காய் உதிர்வு 29 — 09 — 1993



## கப்டன் சாந்தன்

(மோகனரூபன்)

**தங்கவேல் ராதாமோகன்**

புலோலி மெ. மி. த. க. பாடசாலை பழைய மாணவன்

இது தமிழ் வேங்கைகள் வாழும் தேசம் இங்கு
சிங்கள வீணருக்கென்றுமே தோசமென்று
நம் மண்மீது நீவிர் கொண்டீர் பெரும் பாசம்
நீவிர் மாண்டாலும் மாறாது உம்மீது நாம்

நண்பர்கள் கொண்ட நேசம்

(6515)

(நடராசா சர்வேஸ்வரன்)

(புலோப்பளைச் சமர்)

பிறப்பு 9- 12- 1970 வீரச்சாவு 29- 9- 1993

விதையாகித் தமிழீழ மண்ணைக் காத்தாய்
பதைத்த என் வயிறதனால் அமைதி காணச்
சதையில்லை என் சர்வேஸ்வரன் ஈசன்
புதையாத எரியாத உயிர்ச்சேரன்
நிறைவாகத் தமிழீழம் எவரும் நின்று
இறையாக வீர அருள் பொழிந்து காப்பான்
மறையாத மாவீரன் தனையே பெற்றேன்
குறையில்லைப் புலிபடுத்த குகை என் வயிறே.

உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து எமது புண்பட்ட மனதைப் பல வழிகளிலும் ஆறுதல்படுத்திய அனைவருக்கும் நன்றியறிதலைத் தெரிவித்து 12- 11- 93 இன்றுவெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கும் வீட்டுக்கிருத்தியத்திலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கும்.

குடும்பத்தினர்

(சி-7895)

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்: 21- 09- 1915
ஆண்டவன் அடியில்: 28- 10. 1989

திதி: 12. 11. 1993



## அமரர் ஏரம்பு செல்லத்துரை

ஆண்டு பல ஆனாலும்
அன்பினால் அரவணைத்து
நீண்ட பெருவாழ்வு
நீ வாழ்வாய் என்றிருந்தோம்
மாண்டு மண்ணுக்குள்
மாயமாய்ப் போனாலும்
நீண்ட பெருநினைவாய்
நிலைத்திருப்பாய் நீ ஐயா
ஆண்டு பல ஓடினாலும்
நினைவுகள் அன்றோ எமக்கு
என்றும் வழிகாட்டும் எம்
வாழ்வின் குல விளக்கே

அன்புத் தந்தையே வாழ்ந்தாய் எமக்காக வாழ வைத்தாய் தலை நிமிர்ந்து ஈந்தாய் இரப்பவர்க்கு இல்லை என்று சொல்லாமல் ஏந்தி நின்றாய் எம் பெரும்படை அம்மனை இணைந்தாய் இன்று நீ எம் பெருமான் திருப்பாதம்.

என்றும் உங்கள் நினைவில் வாடும்

தகவல்: மகள்:
பா. பரமேஸ்வரி
கைதடி நாவற்குழி,
தெற்கு கைதடி.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(6537)

# குமுறும் எரிமலை மேல் குந்தியிருக்கும் இந்தியா!

தொடர்ந்தும் பின்னடைவுகளையே இந்தியா சருவதேச ரீதியாக சந்தித்து வருகின்றது. எவ்வளவுதான் இந்தியா முயன்றபொழுதும் - வெளிநாட்டு மூலதனத்தை வரவேற்று- பல்தேச வர்த்தக நிறுவனங்கட்கு இந்தியாவை சந்தையாக்க அனுமதித்து - இசுரவேலோடு 20 மாதத்திற்கு முன்னரே முழு அளவிலான உறவுகளை ஏற்படுத்தி இவற்றின் மூலம் தனதுபழைய சோவியத் உறவு காலகட்டத்தை மேற்குலக ஞாபகத்திலிருந்து மறையச் செய்யஎடுக்கும் முயற்சிகள் இன்னமும் வெற்றியடைவதாகத் தெரியவில்லை. என்னதான் மாறியதாகக் காட்டிக் கொண்டாலும் இந்திய அரசின் தேசிய இனங்களை அடக்கி ஒடுக்கும் கொடுங்கோன்மை செயற்பாடு குறையாத நிலையில் அதனை ஒரு சாட்டாக பயன்படுத்தி மனித உரிமை எனும் புதிய ஆயுதத்தைத் தாங்கி மேற்குலகம் இன்னமும் இந்தியாவை மட்டும் தட்டியே வருகின்றது. இதற்கு ஒப்பவே ஆங்கிலேயரிடம் இருந்து முதிசமாக பெற்றுக் கொண்ட பகுதிகளை வலிந்து ஒன்றாக்கி ஒரு நாடாகக் காண்பிக்க ராணுவ ஆதிக்கத்தை சங்கிலியாகப் பயன்படுத்தும் நிலையே இருக்கின்றது. இந்நிலை இந்திய ஆளும் மேட்டுக்குடி அடிப்படையில் எந்த மாற்றங்களையும் பெற்றதாக தெரியவில்லை என்பதையே புலப்படுத்துகின்றது.

இந்தியா சருவதேசரீதியாக தனிமைப்படும் நிலையை நோக்கி நகர்வது அண்மையில் நடந்தேறிய இரு சம்பவங்கள் சுட்டுகின்றன. கொள்கைமாற்றம் என கொள்ளமுடியா விட்டாலும் அண்மையில் அமெரிக்க உயர்நிலைச் செயலர் ஒருவர் காஷ்மீர் பகுதி இன்னமும் விவாதத்திற்குரிய சிக்கலுக்குரிய பகுதியே எனக் கூறி விட்டார். அதுவும் 'ஹஸ்ரத்பால், மதத் தலத்தை இராணுவ முற்றுகைக்குட்படுத்தி சங்கை ஊதிக் கெடுத்த ஆண்டி நிலையில் இந்தியா இருக்கின்ற போது இவ்வறிக்கை வெளியானது. இந்தியாவுக்கு அதிர்ச்சியாகியது. எனவே வழமையாக அமெரிக்காவைத் தூக்கி பிடிக்கும்இந்திய பத்திரிகைகள் இப்போது தூற்றித்தள்ளுகின்றன. அமெரிக்காவின் கூற்றில் உள்ள மறைபொருள் உலகின் அடுத்த சிக்கல் மையமாக காஷ்மீரம் உருவெடுப்பதையே குறிப்பதாக அரசியல்ஆய்வாளர்கள் கருதுகின்றனர்,

இன்னொரு சம்பவமும் இந்தியாவின் முகத்தில் அறைந்தாற் போல் அண்மையில் நடந்தேறியது. நெதர்லாந்து தலைநகரான கேக்கில் உள்ள

ஆகும் அதுமட்டுமன்றி கடந்த யூலாய் மாதம் ஜெனிவாவில் நடைபெற்ற ஐ நாவின் பூர்வீகக் குடிகள் பற்றிய சருவதேச மாநாட்டிலும் NSCN (M) அமைப்பின் தலைவர் ஐசாக் சிசிசு Issacchisisw) கலந்து உரையாற்றியமையும் நாகா மக்களின் விடுதலைப் போராட்டத்தை சருவதேச ரீதியாய்அங்கீகாரம் பெறவைத்து விட்டது.

எனவே முன்னெப்போதும் இல்லாத வகையில் இந்தியாவின் வடகிழக்கு மானிலங்கள் என இந்தியாவால் அழைக்கப்படும் அசாம், மேகாலாயா திரிப்புரா. அருணாச்சலப் பிரதேசம், நாகலாந்து, மணிப்பூர், மிசோராம்போன்றபகுதிகளின் முனைப்படைந்து வரும் விடுதலைப் போராட்டங்கள் உலகின் கவனத்தை ஈர்க்கத் தொடங்கி விட்டன. இங்குள்ள முக்கிய உண்மை என்னவென்றால் இப்பகுதிகள் பூர்வீகக் குடிமக்கள்வாழும்பகுதி. என்றுமே இந்தியாவின் ஆட்சிக்குக்கீழோஅல்லது இந்தியாவினோடுஎவ்வகையிலும் தொடர்புகள் கொண்டதாகவோ

> "ஒரு புறத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளாலும் மறு புறத்தில் வடகிழக்கு மானிலப் பகுதி சீர்குலைவு சக்திகளாலும் இந்தியா பெரும் சவால்களை எதிர் நோக்குகிறது"
> —இந்தியப் பிரதமர் ராவ்

இருக்க வில்லை என்பதுதான் ஆங்கிலேயரின் ஏகாதிபத்திய கனவின் போது அடிமையாக்கப்பட்ட இப் பகுதிகள் பின் இந்தியாவுக்கு கைமாறியது- கலாச்சார மொழி, இனத் தொடர்பு, பொருளாதாரம் என எவ் வழியில் பார்த்தாலும் இப்பகுதி மக்கட்கும் ஏனைய இந்தியப் பகுதிகட்கும் எவ்வித தொடர்புமே இல்லை. இந்தியா இராணுவத்தை பெயருக்கு நிறுத்தி வைத்திருப்பதன் மூலமும் பூர்வீகக்குடி வேறுபாடுகளை பயன்படுத்தி பணத்தை வீசி ஆட்சியாளர் என சிலரை உருவாக்கி வைத்திருப்பதன் மூலம் இந்திய ஆட்சி இப் பகுதிகளில் இருப்பதாக காட்டப்படுகிறது. அது மட்டுமன்றி ஆதிக் குடிகளாக இம் மக்கள் இயற்கையின் மறைவிடங்களில் வாழ்ந்த போதும் ஆங்கிலக் கல்வி கிறிஸ்தவ

இவ்வாறாக இந்திய நடுவரசிலிருந்து முற்றாக அந்நியப்பட்டிருக்கும் இப் பகுதிகள் தமக்கென விடுதலை அமைப்புக்களை இந்தியாவிலிருந்து பிரிந்துதனித்தாயகம் அமைப்பதற்காக அமைத்து ஆயுதப் போராட்டத்தினை முன்னெடுத்து வருகின்றன இவற்றுள் அசாமில் இயங்கிவரும் அசாமிய ஐக்கிய விடுதலை முன்னணி U L. F. A.) போடோ இன மக்களின் விடிவிற்காக போராடும் போடோ மக்கள் பாதுகாப்பு அணி (Bodo Security force) மணிப்புரில், நாகலாந்தில் இயங்கி வரும்நாகலாந்து தேசிய சோசலிசப்பேரவை (NSCN) திரிபுராவில் செயற்படும் தேசிய விடுதலை முன்னணி N. L. F.) ATTU எனப்படும் திரிபுரா ஆதிக்குடிமக்கள் அணி என பலவற்றை குறிப்பிடலாம் இவற்றின் பட்டியல் நீண்டவை இவைகளின் பெயர்களில் தேசியம், விடுதலை, இராணுவ பாதுகாப்பணி என்பன ஒட்டி நிற்கும். மிக நீண்ட காலமாக போராடி வரும் இவ்வமைப்புக்கள் இன்று ஒரு முக்கிய கட்டத்தினை அடைந்திருப்பதாக கூறப்படுகின்றது.

தத்தமது இன குடிகள் வாழும் பகுதிகளில் இவர்கள் மாற்று அரசொன்றையே நிறுவி நடாத்தி வருவது தான் அது. வரிகள் சேகரிப்பது தொடங்கி நிதி வழங்குவன வரை இவர்கள் செயற்பாடுகள் விரிவடைகின்றன இந்தியா ஒரு போதும் இப்பகுதிகளை வென்றெடுக்க முடியாது ஏனென்றால் இப்பகுதி மக்கள் மனவுணர்வுகளை அவர்களின் தன்மையை இந்திய மத்திய அரசால் ஒரு போதும் புரிந்துகொள்ள முடியாது என்பதே முற்றான உண்மையாகும் ஒரு தாழமுக்க நிலையில் தொடர்ந்த போராட்டத்தினை நடாத்தும் இவ்வமைப்புகட்கு இடைக்கும் அண்டை நாடுகள் உதவி இவ் அமைப்புக்கள் கம

இன்று இரகசியமல்ல. இப்போது இன்னொரு புதிய உளவுத் தகவலும் வெளியாகியுள்ளது அதுதான் பாகிஸ்தானின்பெயர்பெற்றஉளவுநிறுவனமான I. S. I (Inter Services Intelligence) பங்களா தேசத்திற்கு ஊடாக இக்குழுக்கட்கு உதவ முன்வந்துள்ளதாக கூறப்படுகின்றது எவர் உதவினாலும் அவர்கள் உதவியைப் பெற்று பக்குவமாக வளர்வதற்கேற்ற இயற்கைச் சூழலே இவ்வமைப்புகளை விரிவடையச் செய்கின்றன.

படுவதாகவும் தெரிகின்றது- சில காலம் முன்னர் மிக கொடூரமாக கட்டற்ற வன்முறையை கட்டவிழ்த்து சீக்கியர் போராட்டம் ஒடுக்கப்பட்டதாக பஞ்சாப்பில் மீண்டும் ஆயுதங்கள் வரத்தொடங்கி விட்டதாகவும் வன் முறைகள் வெடிப்பதாகவும், ஏனைய மானிலங்களிலும் சீக்கியர் செயற்படத் தொடங்கி விட்டதாகவும் செய்திகள் தெரிவிப்பது இதன் விளைவே எனப்படுகின்றது.

எனவே எல்லா அடக்குமுறை அரசுகளைப் போலவே இந்தியாவும் சிக்கல்களின் மூலக்கருவை புறக்கணித்து அதன் விளைவுகளை மிகைப்படுத்தி பயங்கரவாதம் எனப் பட்டம் சூட்டி எல்லாரையும் ஒடுக்கலாம் எனக் காணும் பகற் கனவு கலையும் காலம் நெருங்குகிறது. பேசித் தீர்ப்போம் என அழைப்பு விடுத்து தந்திர அணுகு முறைகளை

[illegible]

இவ்வமைப்புக்கள் தாய்லாந்தின் ஆயுதச் சந்தைகளில் ஆயுதங்கள் கொள்வனவு செய்து மியான்மார் பங்களாதேசத்திற்கு ஊடாக இன்று கடத்தி வருவதாக தெரிகின்றது இவ்வாறாக அண்மையில் 600க்கு மேற்பட்ட A K, G3 ரக துப்பாக்கிகள், கண்ணிவெடிகள், நவீன தொடர்புச் சாதனங்கள், எறிகணை செலுத்திகள் NSCN (ம) பிரிவால் கொள்வனவு செய்யப்பட்டதாகத் தெரிகின்றது. இன்னொரு புதிய திடுக்கிடும் தகவலும் இப்போது இந்திய அரசை அதிர வைத்துள்ளது. குறிப்பாக காஷ்மீரில் இந்திய அடக்குமுறை அதிகரிக்க பாகிஸ்தானை இந்தியா குற்றம் சாட்டும் தொனி அதிகரிக்க பாக்கித்தானும் நாக மக்கள் விடுதலை அமைப்புகட்கு தனது உதவிகளை அதிகரிப்பதாகக் கூறப்படுகின்றது. அண்மையில் கிடைத்த செய்திகளின்படி பாகித்தான் நாகா அமைப்பிற்கு கனரக ஆயுதங்களோடு Stinger ஸ்டிங்கர் விமான எதிர்ப்பு ஏவுகணையும் வழங்கப்பட்டதாக இந்தியத் தகவல்களே தெரிவிக்கின்றன. இவையெல்லாம் வடகிழக்குப் பகுதியையே இன்னொரு காஷ்மீரை உருவாக்க வழி வகுக்கும் என்றே பொதுவாக இப்போது கருதப்படுகின்றது.

மேலும் இவ்வாறு அடிமைத்தனத்தை அறுக்க வேண்டிப் போராடும் அமைப்புகளிடையே முன்னெப்போதும் இல்லாத வகையில் புரிந்துணர்வும் தொடர்பும் அதிகரித்து

கையாள்வதிலும் இந்தியஅரசு ஒன்றும் குறைந்தது அல்ல. இவ்வாறாக முன்னர் மிசோராம் பகுதியில் போராடிய லால் டெங்கா தலைமையிலான அமைப்பை பேச்சுக்கு அழைத்து சில தீர்வுகளை வழங்கினர் ஆயுதங்கள் ஒப்படைக்கப்பட்டால் போராளிகள் மறுவாழ்வுக்கும் வகைகள் செய்யப்படவும் ஏற்பாடானது ஆனால் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமையால் இவ்வமைப்பு இன்று செல்லாக்காசாகிவிட்டது. அது போலவே கூர்க்காஇன மக்களின் நலனிற்காக போராடிய கூர்க்கா தேசிய விடுதலை முன்னணியோடும் பேசப்பட்டு சுயாட்சி பிரதேசசபை மேற்கு வங்கத்தில் அமைக்க முடிவானது. அதுவும் ஏமாற்றத்தில்முடிவே இப்போது GNLF தலைவர் சுபாஸ் கெய்சிங்கோர்க் கொடி உயர்த்தியவாறு மட்டுமன்றி காங்கிரஸ் அரசுக்கு எதிராக மேற்கு வங்க ஆட்சியாளரோடு கூட்டும் சேர்ந்து விட்டார் எனவே அம்பலமாகும் இவ்வாறான அணுகு முறைகள் வடகிழக்குப் பகுதியில் பயன்படும் வாய்ப்பில்லை.

எனவே இப்போது பிரதமர் நரசிம்மராவ் இரு தினங்கட்கு முன் கூறியதைப் பாருங்கள் "தமிழீழ விடுதலைப் புலிகளாலும்வட கிழக்கு மாநிலங்களில் இயங்கும் சீர் குலைவு சக்திகளாலும் இந்தியாபெரும் சவால்களை எதிர்நோக்குகிறது" என்றார். யார் யாருக்கு சவால்? பல்வேறு தேசியங்

## ரி. 55 டாங்கி

தயாரித்த நாடு — செக்கோசிலாவாக்கியா
நீளம் — 6. 4 மீற்றர்
அகலம் — 3. 27 மீற்றர்
உயரம் — 2. 04 மீற்றர்
நிறை — 36 மெற்றிக் தொன்

முன்பக்க கவசத் தடிப்பு 49 மி. மீ.
பக்கவாட்டு கவசத் தடிப்பு 79 மி. மீ.
பின்பக்க கவசத் தடிப்பு 46 மி. மீ.
கீழ் பக்க கவசத் தடிப்பு 20 மி. மீ.

சுழல்மேடை முன்பக்க கவசத் தடிப்பு 203 மி. மீ.
,, பின்பக்க கவசத் தடிப்பு 64 மி. மீ.
,, பக்கவாட்டு கவசத் தடிப்பு 150 மி. மீ.
,, மேல்பக்க கவசத் தடிப்பு 39 மி. மீ.

பயணம் செய்யும் வீரர்
- கண்னர் (சுடுபவர்) — 01
- லோடர் (உதவியாளர்) — 01
- கப்டன் (கட்டளையிடுபவர்) 01
- றைவர் (சாரதி) — 01

ரி. 55 டாங்கியில் பொருத்தப்பட்டுள்ள கனரக ஆயுதம்; கொண்டுசெல்லக்கூடிய பொருள்கள்.

- 50 கலிபர் — 01 இதற்கான ரவை 500
- 100 மி. மீ. பீரங்கி—1 இதற்கான ஷெல் 43
- ரி.62ரக இயந்திரத்துப்பாக்கி இதற்கான ரவை3600
- ரி. 55 டாங்கியின் வேகம் 50 கே. எம் / எச்

பீரங்கி குறிபார்த்து சுடக்கூடிய தூரம் 2000 மீற்றர்

ஆளுங்கட்சி உறுப்பினராக

## பாராளுமன்றத்தில் நேற்று அநுரா பதவியேற்றார்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்துவெளியேறிய அநுரா பண்டாரநாயக்கா ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய பட்டியல் உறுப்பினராக நேற்று பாராளுமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

சத்தியப்பிரமாணம் செய்து கொண்டபின் அநுரா பண்டாரநாயக்கா முதல் தடவையாக பாராளுமன்றத்தில் அரச தரப்பு ஆசனத்தில் அமர்ந்து கொண்டார். கடந்த ஒக்டோபர் 11ஆம் திகதி சுதந்திரக்கட்சியிலிருந்து விலகிய அநுரா 26ஆம் திகதி ஐ. தே. கவில் இணைய தனது விருப்பத்தை தெரிவித்தார்.

ஒரு கட்சியின் தேசியபட்டியல் மூலம் நியமனம் பெற்ற ஓர் உறுப்பினர் விலகி அவ்விடத்திற்கு வேறு ஒருவர் நியமனம் பெற்றது இது முதற் தடவையாகும். அவ்வாறே ஒரு கட்சி உறுப்பினராக தேர்தலில் தெரிவான உறுப்பினர் மற்றோர் கட்சியின் தேசிய பட்டியல் மூலம் பாராளுமன்றம் செல்வதும் இதுவே முதல் முறை அநுராவிற்கு இடமளிக்கும் முகமாக களுத்துறை மாவட்ட ஐ. தே. க. தேசிய பட்டியல் எம். பி. டபிள்யூ எல். பெர்னான்டோ பதவி விலகியது குறிப்பிடத்தக்கது.

### 120 எம். எம்.

- 50 கலிபர் கனரக இயந்திர துப்பாக்கிகள் - 10க்கு மேல்
- நவீன ராடர்கள்

இவற்றை தவிரபெரும் எண்ணிக்கைகளில் தானியங்கித் துப்பாக்கிகளும், பெருமளவு ரவைகளும் இராணுவ உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக அறிய வருகின்றது.

இதேவேளை பூநகரி இராணுவ முகாமைக் கைப்பற்றிய புலிகள் அங்கிருந்து ஐந்து கிலோமீற்றர் தாக்குதல் வீச்சைக் கொண்ட 120 எம். எம் பீரங்கிகள் - 6 உட்பட கனரக ஆயுதங்களைக் கைப்பற்றியுள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன. இத்தாக்குதலின் போது ஆட்லறி பீரங்கிகள் கைப்பற்றப்பட்டதாக பி. பி. ஸி தெரிவித்தது.

### இரு டாங்கிகள்

விடுதலைப் புலிகள் கைப்பற்றிய

விவாதத்திற்குரிய சிக்கலுக்குரிய பகுதியே எனக் கூறி விட்டார். அதுவும் 'ஹஸ்ரத்பால், மதத் தலத்தை இராணுவ முற்றுகைக்குட்படுத்தி சங்கை ஊனதிக் கெடுத்த ஆண்டி நிலையில் இந்தியா இருக்கின்ற போது இவ்வறிக்கை வெளியானது. இந்தியாவுக்கு அதிர்ச்சியாகியது. எனவே வழமையாக அமெரிக்காவைத் தூக்கிப் பிடிக்கும் இந்திய பத்திரிகைகள் இப்போது தூற்றித்தள்ளுகின்றன. அமெரிக்காவின் கூற்றில் உள்ள மறைபொருள் உலகின் அடுத்த சிக்கல் மையமாக காஷ்மீரம் உருவெடுப்பதையே குறிப்பதாக அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்,

இன்னொரு சம்பவமும் இந்தியாவின் முகத்தில் அறைந்தாற் போல் அண்மையில் நடந்தேறியது. நெதர்லாந்து தலைநகரான கேக்கில் உள்ள மாற்று ஐ. நா எனப்படும் விடுதலைக்குப் போராடும் அமைப்புக்களின் சருவதேச அமைப்பான பிரதிநிதித்துவப்படாத தேசங்களினதும் மக்களினதும் அமைப்பில் (Unpo - Unrepresented Nations and Peoples Organ.Sation) இந்தியாவுக்கு எதிராகப் போராடும் அமைப்பொன்று அங்கத்துவம் பெற்றமை இந்தியாவின் வடகிழக்கு மானிலங்கள் எனப்படும் பகுதியில் வாழும் நாகா தொன்மைக் குடிகளின் தனியான தாயகத்திற்காக போராடும் (Nscnc) (M) நாகா மக்களின் தேசிய சோசலிச பேரவை

ஆங்கிலேயரின் ஏகாதிபத்தியகளின் போது அடிமையாக்கப்பட்ட இப் பகுதிகள் பின் இந்தியாவுக்கு கைமாறியது- கலாச்சார மொழி, இனத் தொடர்பு, பொருளாதாரம் என எவ் வழியில் பார்த்தாலும் இப்பகுதி மக்கட்கும் ஏனைய இந்தியப் பகுதிகட்கும் எவ்வித தொடர்புமே இல்லை. இந்தியா இராணுவத்தை பெயருக்கு நிறுத்தி வைத்திருப்பதன் மூலமும் பூர்வீகக்குடி வேறுபாடுகளை பயன்படுத்தி பணத்தை வீசி ஆட்சியாளர் என சிலரை உருவாக்கி வைத்திருப்பதன் மூலம் இந்திய ஆட்சி இப் பகுதிகளில் இருப்பதாக காட்டப்படுகிறது. அது மட்டுமன்றி ஆதிக் குடிகளாக இம் மக்கள் இயற்கையின் மறைவிடங்களில் வாழ்ந்த போதும் ஆங்கிலக் கல்வி கிறிஸ்தவ மதம் என்பன ஆங்கிலேயரால் புகுத்தப்பட்டமை குறிப்பாக கிறிஸ்தவ மிசனரிமார் பணி காரணமாக விழிப்படைந்த கல்வி அறிவு பெற்று வெளியுலகத்தொடர்புகள் கொண்ட மக்களாக இருப்பது இந்தியாவுக்கு இன்னும் சிக்கலைக் கொடுத்து வருகின்றது. இன்றும்கூட இப் பகுதிகட்கு வருகை தரும் இந்திய அமைச்சர்களோ அவ்வவ் மானில முதலமைச்சர் யார் என தெரியாத நிலையில் அவரின் பெயரைக் கேட்டறிந்து கொள்ள வேண்டிய இடைவெளியே இருப்பதாக குல்தீப் நாயர் கூறுகிறார்.

கூறப்படுகின்றது.

தத்தமது இன குடிகள் வாழும் பகுதிகளில் இவர்கள் மாற்று அரசொன்றையே நிறுவி நடாத்தி வருவது தான் அது. வரிகள் சேகரிப்பது தொடங்கி நிதி வழங்குவன வரை இவர்கள் செயற்பாடுகள் விரிவடைகின்றன இந்தியா ஒருபோதும் இப்பகுதிகளை வென்றெடுக்க முடியாது ஏனென்றால் இப்பகுதி மக்கள் மனவுணர்வுகளை அவர்களின் தன்மையை இந்திய மத்திய அரசால் ஒருபோதும் புரிந்துகொள்ள முடியாது என்பதே முற்றான உண்மையாகும் ஒரு தாழமுக்க நிலையில் தொடர்ந்த போராட்டத்தினை நடாத்தும் இவ்வமைப்புகட்கு இடைக்கும் அண்டை நாடுகள் உதவி இவ் அமைப்புக்கள் தமக்கிடையே ஏற்படுத்த முயலும் இணைப்புக்கள் புதியதொரு பாரிய நெருக்கடியை உருவாக்கப் போவதாக இப்போது கருதப்படுகின்றது. இந்திய, பர்மிய எல்லையில் அமைந்திருக்கும் நாகாப்பகுதி மக்கட்கு பர்மா (மியன்மார்) வின் அடக்குமுறைக்குஉள்ளாகும். ஏனைய பூர்வீக குடிமக்கள் ஆதரவும் உண்டு அசாமிலும், மணிப்பூரிலும் இதே கதைதான். அதுபோல் இந்தியாவின் போக்கில் கசப்புற்றிருக்கும் பங்களாதேசமும் பல்வேறு வடகிழக்கு பகுதி அமைப்புகட்கு பயிற்சியளித்து ஆயுதங்கள் வழங்கி வருவதும்

தியா குற்றம் சாட்டும் தொனி அதிகரிக்க பாக்கிஸ்தானும் நாக மக்கள் விடுதலை அமைப்புகட்கு தனது உதவிகளை அதிகரிப்பதாகக் கூறப்படுகின்றது. அண்மையில் கிடைத்த செய்திகளின்படி பாகிஸ்தான் நாகா அமைப்பிற்கு கனரக ஆயுதங்களோடு Stinger ஸ்டிங்கர் விமான எதிர்ப்பு ஏவுகணையும் வழங்கப்பட்டதாக இந்தியத் தகவல்களே தெரிவிக்கின்றன. இவையெல்லாம் வடகிழக்குப் பகுதியையே இன்னொரு காஷ்மீரை உருவாக்க வழி வகுக்கும் என்றே பொதுவாக இப்போது கருதப்படுகின்றது.

மேலும் இவ்வாறு அடிமைத்தனத்தை அறுக்க வேண்டிப் போராடும் அமைப்புகளிடையே முன்னெப்போதும் இல்லாத வகையில் புரிந்துணர்வும் தொடர்பும் அதிகரித்து வருகின்றது. இது வரப்போகும் பேரழிவின் அறிகுறி என புரொண்லைன் இதழ் அச்சப்படுகின்றது. இப்போது NSCN (m) அமைப்பானது அசாமில் செயற்படும் அசாமியவிடுதலை முன்னணியோடும் BSF எனப்படும் மிக முனைப்பாகப் போராடும் போடோ மக்கள் அணியோடும் திரிபுராவில் தீவிரமாக இயங்கும் அமைப்புகளோடும் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தி விட்டதாக தெரிகின்றது. அத்தோடு பாக்கின் பின்னணியோடு காஷ்மீரின் விடுதலை அமைப்புகளோடு பஞ்சாப்பில் போராடும் சீக்கிய, அமைப்புகளுடன் இணைப்புக்கள் ஏற்படுத்தப்

தில் அமைக்க முடிவானது. அதுவும் ஏமாற்றத்தில்முடியவே இப்போது GNLF தலைவர் சுபாஸ் கெய்சிங்கோர்க் கொடி உயர்த்தியவாறு மட்டுமன்றி காங்கிரஸ் அரசுக்கு எதிராக மேற்கு வங்க ஆட்சியாளரோடு கூட்டும் சேர்ந்து விட்டார் எனவே அம்பலமாகும் இவ்வாறான அணுகுமுறைகள் வடகிழக்குப் பகுதியில் பயன்படும் வாய்ப்பில்லை.

எனவே இப்போது பிரதமர் நரசிம்மராவ் இரு தினங்கட்கு முன் கூறியதைப் பாருங்கள் ''தமிழீழ விடுதலைப் புலிகளாலும்வட கிழக்கு மாநிலங்களில் இயங்கும் சீர் குலைவு சக்திகளாலும் இந்தியாபெரும் சவால்களை எதிர்நோக்குகிறது'' என்றார். யார் யாருக்கு சவால்? பல்வேறு தேசியங்களை தமது முதலாளிய நலன்கட்காக அடிமைப்படுத்தி அதனை தேசிய ஒற்றுமை என பூச்சுப்பூசி ஒடுக்கும்இவர்கள் எவ்வளவு காலம்தான் அடக்கு முறைகளை நம்பி காலம்கழிப்பார்கள்? வெளியே அமைதியாக உள்ளே கனன்று குமுறும் எரிமலையை ஒத்த இந்திய நிலைமை எப்போது பூகம்பமாகவெடிக்கும்,என்பது வரலாறு தீர்மானிக்க வேண்டிய சங்கதி- ஆனால் ஒரு காஷ்மீரால் பல காஷ்மீர்கள் உருவாகிக் கொண்டு இருப்பதை எம்மால் காணமுடிகின்றது.

யாக பாராளுமன்றத்தின் அரச தரப்பு ஆசனத்தில் அமர்ந்து கொண்டார். கடந்த ஒக்டோபர் 11ஆம் திகதி சுதந்திரக்கட்சியிலிருந்து விலகிய அநுரா 26ஆம் திகதி ஐ. தே. கவில் இணைய தனது முறை அநுராவிற்கு இடமளிக்கும் முகமாக களுத்துறை மாவட்ட ஐ. தே. க. தேசிய பட்டியல் எம். பி. டபிள்யூ எல். பெர்னான்டோ பதவி விலகியது குறிப்பிடத்தக்கது.

## 120 எம். எம்.

∴ 50 கலிபர் கனரக இயந்திர துப்பாக்கிகள் - 10க்கு மேல்
∴ நவீன ராடர்கள்

இவற்றை தவிரபெரும் எண்ணிக்கைகளில் தானியங்கித் துப்பாக்கிகளும், பெருமளவு ரவைகளும் இராணுவ உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக அறிய வருகின்றது.

இதேவேளை பூநகரி இராணுவ முகாமைக் கைப்பற்றிய புலிகள் அங்கிருந்து ஐந்து கிலோமீற்றர் தாக்குதல் வீச்சைக் கொண்ட 120 எம். எம் பீரங்கிகள் - 6 உட்பட கனரக ஆயுதங்களைக் கைப்பற்றியுள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன. இத்தாக்குதலின் போது ஆட்லறி பீரங்கிகள் கைப்பற்றப்பட்டதாக பி. பி. ஸி தெரிவித்தது.

## இரு டாங்கிகள்

விடுதலைப் புலிகள் கைப்பற்றிய கனரக வாகனங்களில் இரு டாங்கிகளும், மற்றும் இராணுவ வாகனங்களும் உள்ளடங்கியுள்ளது. இதனை சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் ஒப்புக்கொண்டன.

# தமிழ் மீனவர்களை இலங்கைவங்கி புறக்கணிப்பு

திருக்கோணமலை மாவட்டத்தில் இலங்கை வங்கியின் அசிரத்தையினால் தமிழ் மீனவர்களுக்கு கடன்பெற முடியவில்லை என அப்பகுதி தமிழ் கடற்தொழிலாளர்கள் சமாசம் கவலை தெரிவிக்கின்றது.

திருக்கோணமலை மாவட்டத்தில் மீன்பிடிக்கென கடன்களை வழங்குவதற்குஇலங்கை வங்கி திட்டம் ஒன்றை முன் வைத்ததாகவும் இதில் சுமார் 100 சிங்கள மீனவர்களுக்கு மட்டும் கடன்கள் வழங்கப்பட்டதாகவும் ஏனைய தமிழ் மீனவர்களின் விண்ணப்பங்கள் தட்டிக்கழிக்கப்பட்ட தாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இத்திட்டத்தின் கீழ் கடன்களை பெறுவதற்கு சுமார் 50க்கும் 60க்கும் இடைப்பட்ட விண்ணப்பம் இலங்கை வங்கிக்கு அனுப்பப்பட்டதாகவும் ஆனால் இவர்கள் தமிழர்கள் என்பதால் நிவாரணம் வழங்க முடியாது என விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டதாகவும் அறியவருகிறது. இதற்கு காரணமாக இராணுவ நடவடிக்கையினால் சிக்கல்களை எதிர்நோக்கலாம் என்ற அச்சம் காரணமாக இவை நிராகரிக்கப்பட்டதாகவும், கடனை கடற்தொழில் அமைச்சு சிபார்சு செய்தால் மட்டுமே தமிழர்களுக்கு வழங்க முடியும் என அவ் வங்கி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# பயணியிடம் நகைதிருடியவர் மறுநாள் அதே இடத்தில் கைது

(தென்மராட்சி)

கொழும்பு செல்வதற்காக கிளாலி இறங்குதுறையில் வரிசையில் நின்ற பயணி ஒருவரின் நகையைத் திருடிய பெண் மறுதினம் கிளாலி கடற்கரையில் காவல்துறையினரிடம் அகப்பட்டுக்கொண்டார்.

மேற்படி சம்பவம் கடந்த 2ஆம் திகதி நடந்துள்ளது. இச் சம்பவம்பற்றி தெரியவருவதாவது; ஆனைக்கோட்டையை சேர்ந்த எஸ். பாலசிங்கம் பயணிகள் நிற்பதற்காக ஒழுங்கு செய்யப்பட்ட இடத்தில் வரிசையில் நின்றுள்ளார். அப்போது இவரின் பின்னால் பெண் ஒருவர் குழந்தை ஒன்றுடன் நின்றாராம். சிறிது நேரத்தில் தனது காலில் ஏதோ தட்டுப்படுவதை இவர் உணர்ந்தபோதும் குழந்தைதான் தட்டுகிறது என நினைத்தார். பின்னர் அவர் தனது காற்சட்டை பொக்கற்றில் வைத்த நகையினை தடவிப்பார்த்தபோது பொக்கற் வெட்டப்பட்டு

கிளாலியில் நடந்தது

நகை களவுபோயிருந்தமையை உணர்ந்துகொண்டார். அடுத்து அவர் பளை காவல்துறையினருக்கு முறையிட்டார் என தெரியவருகின்றது.

இதேவேளை அடுத்தநாள் குழந்தையுடன் ஒரு பெண் மழைக்கவசம் அணிந்து வந்துள்ளார். இவர்மேல் சந்தேகம் கொண்ட காவல்துறையினர் அப்பெண்ணை விசாரணை செய்ததை அடுத்து முதல் நாள் நடைபெற்ற 10 பவுண் நகை திருட்டு அவராலேயே நடத்தப்பட்டது தெரியவந்தது. அதைஅடுத்து அப்பெண் பளை காவல்துறையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இது இவ்வாறிருக்க இதே தினம் ஆலங்கேணி கரையில் இருந்து கிளாலிக்கு வந்த பல்கலைக்கழக மாணவி ஒருவர் 35,000 ரூபாவை பறிகொடுத்தார் எனவும் தெரியவருகின்றது. [86]

# திராவிட முன்னேற்ற கழகத்திலிருந்து கோபாலசாமி வெளியேற்றப்பட்டார்

(சென்னை)

தி. மு. க. விலிருந்து வை. கோபாலசாமி நீக்கப்பட்டு விட்டார். கட்சியின் தேர்தல் பணி செயலாளர் பதவியிலிருந்தும் சாதாரண உறுப்பினர் பொறுப்பிலிருந்தும் அவர் நீக்கி வைக்கப்பட்டுள்ளதாக தி. மு. க. பொதுச்செயலர் அன்பழகன் வை. கோபாலசாமிக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

கட்சிக் கட்டுப்பாட்டிற்கும் சட்ட திட்டத்திற்கும் மாறாக வை. கோபாலசாமி நடந்து கொண்டதாக அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. தன்னைக் கொல்ல விடுதலைப் புலிகளுடன் வை. கோபாலசாமிசதி செய்வதாகசிலவாரங்களுக்கு முன்அறிக்கை விடுத்ததை அடுத்துவை.கோபாலசாமிக்கும் கருணாநிதிக்கும் இடையில் முறுகல் நிலை நிலவி வந்தது தெரிந்ததே.

நாஞ்சில் மனோகரனை தொடர்ந்து தற்போது வை. கோபாலசாமியும் தி. மு. க. தலைமையினால் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

# நில நடுக்கத்தின்போது உயிர்தப்பிய குழந்தை

மகாராஷ்ரா மாநிலத்தில் அண்மையில் நடைபெற்ற நிலநடுக்கத்தால் ஐந்து மாத பெண்குழந்தை அதிசயிக்கத்தக்க முறையில் உயிர்தப்பியுள்ளது.

மூச்சு திணறி மயங்கியிருந்த அந்த பெண் குழந்தையை சிதையில் வைக்கப் போகும் கடைசிநேரத்தில் அதற்கு உயிர்இருப்பதை அவதானித்த இந்திய படையினர் விரைந்து மருத்துவ மனைக்கு காண்டு சென்றதனால் இக் குழந்தை உயிர்பிழைத்துள்ளது.

குழந்தையை சுற்றிலும் இடிபாடுகள் இருந்தமையினால் குழந்தைக்கு மூச்சு திணறல் ஏற்பட்டிருந்தது.

இக் குழந்தையின் உறவினர் அனைவரும் இந் நில நடுக்கத்தினால் இறந்து விட்டார்கள். எனவே இக் குழந்தையை ஒரு தனியார் மருத்துவ மனையைச் சேர்ந்தவர்கள் வளர்ப்பதற்கு தீர்மானித்துள்ளனர். இக் குழந்தைக்கு நிவேதிகா என்ற பெயரிடப்பட்டுள்ளது.

# மாதம் ஒன்றிற்கு இரு கப்பல்களில் தபால்

(யாழ்ப்பாணம்)

மாதம் ஒன்றிற்கு யாழ். குடாநாட்டிற்கு வருகின்ற இரண்டு கப்பல்களில் தபால் பொதிகள் அனுப்பி வைக்கப் படும்என நடவடிக்கை பிரதித் தபால்அதிபர் நாயகம் ஆ. சிவபுலத்தரசர் தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டிற்கான கப்பற்சேவை தற்போதுள்ள மாரிகால சூழ்நிலையில் மட்டுப்படுத்தப்பட்டாலும் இந் நடைமுறை கடைப்பிடிக்கப் படும் என அவர் தெரிவித்தார்,

யாழ். பிரதம தபாலக அதிகாரி ஒருவரிற்கு எழுதிய கடிதமொன்றில் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது; இம் மாத முற்பகுதியில் யாழ். நோக்கிவந்த கப்பல்களில் தபால் பொதிகள் ஏற்றாமைக்கு காலநிலை ஒரு காரணம் எனவும் இம்முறை தபால் பொதிகள் ''குமாரி''யில் எடுத்துவரப்படவுள்ள தாகவும் தெரிவித்துள்ளார்.(பா)(நி)

# சாவகச்சேரி நவீன சந்தை மீது 'சுப்பசொனிக்' குண்டு வீச்சு

## ஒருவர் பலி; பல கடைகள் நாசம்

[தென்மராட்சி]
சாவகச்சேரி சந்தைப் பகுதியில் சிறிலங்கா அரசுக்குச் சொந்தமான சுப்பர்சொனிக் விமானங்கள் நேற்று பிற்பகல் நடாத்திய தாக்குதலில் ஒரு வயோதிபப் பெண் பலியானார். மூன்றுபேர்காயமடைந்தனர். சந்தைப்பகுதி கடைகள் தரைமட்டமாகின

நேற்று மாலை 2 30 மணியளவில் இப் பகுதிக்கு வந்த சுப்பர சொனிக் விமானம் சாவகச்சேரி சந்தைப் பகுதியில் ஒருகுண்டை வீசியது. இக் குண்டுத் தாக்குதலினால் மீசாலையைச் சேர்ந்த குலசேகரம் தெய்வானைப் பிள்ளை [வயது 64] என்ற வயோதிபப் பெண் பலியானார். மேலும் மீசாலை வடக்கைச் சேர்ந்த நேசன் செல்வராசா [வயது28]. புத்தூர் கிழக்கைச் சேர்ந்த கணபதியாகராசா (வயது35), கச்சாய் வீதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் விமலேஸ்வரன் [வயது12] ஆகியோர் காயமடைந்தனர்.

மறுதடவை வீசப்பட்ட குண்டினால் சாவகச்சேரி சந்தை மேல்மாடியில் இருந்த 15க்கும் மேற்பட்ட கடைகள் பலத்த சேதமடைந்தன. மேலும் சந்தையிலிருந்த பல கடைகள் தரைமட்டமாகின.

மேலும் சாவகச்சேரிமருத்துவமனையில் எஸ். யோகம் [வயது26] என்பவர் அனுமதிக்கப்பட்டுள்ளார். [86][நி]

# இராணுவத்தின் இதயத்தில் அடிக்கும் வல்லமை உள்ளவர்

## புலிகள் குறித்து பி. பி. ஸி

பூநகரியில் புலிகள் நடத்திய தாக்குதல் புலிகள் ஓய்ந்துவிட்ட படையல்ல இன்றும் இராணுவத்தின் இதயம் போன்ற இடத்தில் கூட அவர்களுக்கு அடித்து நொருக்கும் பலம் உள்ளது என்பதை நிருபிக்கின்றது இவ்வாறு பி. பி. ஸியின் கீழ்த்திசைப்பிரிவு செய்தியாளர் ரீட்டா பெயின் கூறியுள்ளார்.

'புலிப்படையின் பதிலடி' என்ற அவரின் செய்தி ஆய்வில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இராணுவ அதிகாரிகள் கூட இடத்தை பிடித்து பாதுகாப்பு எல்லை போடும் உத்தி சரியான உத்தியா என கேள்வி எழுப்புகின்றனர். பூநகரி தளத்தை இப்போது இழந்து நிற்பதால் அரசின் அரசியல் கொள்கைகளே கேள்விக்குறியாகிவிட்டன. ஜனவரியில் அரசு கிழக்கில் தேர்தல் நடத்த திட்டமிட்டுள்ளது அதற்கு போதுமான பாதுகாப்பு அளிப்பதே இப்போது கடினமாகிவிட்டது என சுட்டிக்காட்டப்படுகிறது தேர்தல் நடத்தி அதன்மூலம் தன் அரசியல் திட்டங்களை செயற்படுத்தினால் புலிகளை ஓரங்கட்டலாம் என அரசு எண்ணியிருந்தது இப்போது பூநகரி முகாம் வீழ்ச்சியால் அரசின் அக்கனவு நனவாகுமா என்பது சந்தேகம்.

யாழ் கடனீரேரியை கண்காணிக்க அமைக்கப்பட்ட பூநகரி நாகதேவன் துறை முகாம்களில் சுமார் 2000 இராணுவத்தினரும் கடற்படையினரும் தங்கியிருந்தனர் இருவருடங்களின் முன்பு இப்பகுதியை இராணுவம் பிடித்தது அது முதல் யாழ்குடாவிற்கு செல்லும் அத்தியாவசியப் பொருள்கள் மீது தடைவிதித்தனர் ஐந்து வாரத்தின் முன்பே இராணுவம் கிளாலிக்கு வந்தது பூநகரி முகாம் கிளாலியிலிருந்து 5 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது.

கிளாலியை கைப்பற்ற இராணுவம் எடுத்த நடவடிக்கையை பத்திரிகைகளும், இராணுவஆய்வாளர்களும் சரியாக திட்டமிடாத நடவடிக்கை என விமர்சித்தனர்.

புலிகள் கடந்த வாரமே பெரிய தாக்குதலுக்கு ஆயத்தம் செய்வதாக எச்சரிக்கை விடப்பட்டிருந்தது. விஜேதுங்க பதவிக்கு வந்த புதிதில் புலிகளுடன் பேசப்போவதாக கூறினார் சில மாதங்களில் அவரின் பேச்சில் திடீர் மாற்றம் ஏற்பட்டது இனப்பிரச்சினை ஏதுமில்லை வெறும் பயங்கரவாதமே உள்ளது என அவர் பேசினார் இதை புலிகளுக்கு எதிரான போர் பிரகடனமாகவே பலரும் விபரித்தனர்.

பிரபாகரன் தலைமையில் இயங்கும் விடுதலைப்புலிகளுக்கு எதிரான போர் முழக்கமாகவே ஜனாதிபதியின் இப்பேச்சு சித்திரிக்கப்பட்டது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# யாழ்நகர கரையோரத்தில் அகோர ஷெல்தாக்குதல்

## மூவர் பலி; இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)
யாழ். நகரின் கரையோரப் பகுதிகளின் மீது நேற்றுப் பிற்பகல் சிறிலங்கா இராணுவத்தினர் அகோர எறிகணைத் தாக்குதலை நடத்தினர்.

இத் தாக்குதலில் பாஷையூர்ப்பகுதியில் வீழ்ந்து வெடித்த எறிகணை ஒன்றினால் தாய், மகன் ஆகிய இருவர் பலியானதுடன், கணவன் மனைவி ஆகிய இருவர் படுகாயமடைந்தனர்.

இத் தாக்குதலில் பாஷையூர் பகுதியில் வீழ்ந்து வெடித்த எறிகணையினால் கிருஷ்ணதாஸ் மலர்ராணி (42)இவரது மகன் கிருஷ்ணதாஸ் ஜேசுராசா (05) ஆகியோர் பலியாகினர். மேலும் செபஸ்தியான்பிள்ளை சூசைதாஸ் (44), இவரின் மனைவி சூசைதாஸ் புஸ்பராணி (46 ஆகிய இருவர் படுகாயம் அடைந்தனர்.

மேலும் குருநகரில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் சேதங்கள் ஏற்பட்டதாக தெரியவருகிறது. (24)(21)(நி)

# யாழ்நகரில் குண்டுவீச்சு

## மூவர் காயம்; வீடுகள் சேதம்

(நமது நிருபர்)
யாழ். நகர மக்கள் குடியிருப்பு மீது சிறிலங்காவின் குண்டு வீச்சு விமானம் ஒன்று நடத்திய திடீர் குண்டுவீச்சால் மூவர் படுகாயமடைந்ததுடன் நான்கு வீடுகளும் சேதமடைந்தன. நேற்றுக் காலை 11.00 மணியளவில் பலாலியிலிருந்து பூநகரி நோக்கி சென்று கொண்டிருந்த சியாமாசெட்டி ரக குண்டுவீச்சு விமானம் ஒன்று திடீரென ஓர் குண்டை வீசிச்சென்றது. இக் குண்டு பிரப்பங்குளம் வீதியிலிருந்த நவரட்ணம் என்பவரின் வீட்டின் மீது வீழ்ந்துவெடித்ததில் அவரது மனைவி, மகள் ஆகியோரும் அயல்வீட்டில் வசித்த பெண்மணி ஒருவரும் காயமடைந்தனர். இதில் நவரட்ணம் என்பவரின் மனைவி நவமதி (வயது50), மகள்சந்திரவதனி மற்றும் சிவலோகநாதன் சிவபாக்கியம் ஆகியோரே காயமடைந்தவர்களாவர். இவர்கள்மூவரும் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி தாக்குதலுக்கு இலக்காகிய நவரட்ணம் என்பவரின் வீடு பலத்தசேதமடைந்துள்ளதுடன் அயலிலிருந்த சண்முகரட்ணம், கணேசராஜா பாலசிங்கம் ஆகியோரின் வீடுகளும் சிறிது சேதமடைந்துள்ளன.

# கடற்படை உயர் அதிகாரிகள் பலர் பலி!

(கொழும்பு)
நாகதேவன்துறை கடற்படை முகாமில் பலியான கடற்படையினரில் பல கடற்படை உயரதிகாரிகளும் பலியாகி உள்ளதாக சர்வதேச செய்தி ஸ்தாபனங்கள் தெரிவித்தன

பூநகரி இராணுவ முகாம் விடுதலைப் புலிகளால் தாக்குதலுக்கு உள்ளான அதேவேளை இந்த கடற்படை முகாம் தாக்கப்பட்டது எனவும் இதனால் அங்கிருந்த கடற்படையினரும் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சிதறி

எறிகணை வீச்சு

பூநகரி இராணுவமுகாம்

# பூநகரியில் மாவீரரான மாவீரர்களுக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)
பூநகரி - நாகதேவன்துறை கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இராணுவ கடற்படைத் தகர்ப்பின் போது வீரச்சாவடைந்த விடுதலைப்புலிகளுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக குடாநாடு எங்கும் கறுப்பு கொடிகளும், தோரணங்களும் தொங்கவிடப்பட்டிருந்தன.

குடாநாடெங்கும் அஞ்சலிக்கான பல்வேறு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. வீதியில் ஓடும் வாகனங்களிலும் மக்களின் வீடுகளின் வாயில்களிலும் கறுப்புக் கொடிகள்கட்டப்பட்டுள்ளன.

பிரதான சந்திகள் தோறும் ஒலிபெருக்கிகள் பொருத்தப்பட்டு சோககீதங்கள் இசைக்கப்பட்டு வருகிறது.

# புலிகளின் கட்டுப்பாட்டில் யாழ். கடல் நீரேரி வந்தது

உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

11-11-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 11587
வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கம்:
24-5127.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

27-9492, 24-8714, 26-3473, 42-2432, 41-8467, 27-3841, 41-5417, 42 1754.

கணனி இலத்திரனியல் கண்காட்சி

மேற்படி கண்காட்சி மறு அறிவித்தல்வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி.
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

(6558)

# அனைத்துலகப் பெண்கள் நாளை முன்னிட்டு விடுதலைப்புலிகள்மகளிர்அமைப்பினால் நடாத்தப்படும் இலக்கிய,ஓவியப்போட்டிகள்

1994-03-08 இல் நிகழவிருக்கும் அனைத்துலகப் பெண்கள் நாளை முன்னிட்டு, தமிழீழப் பெண்களுக்கான இலக்கிய, ஓவியப் போட்டிகளை நடாத்த விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பு முடிவு செய்துள்ளது.

இலக்கியப் போட்டிகள் சிறுகதை, கவிதை என்ற இரண்டு விடயத்தின் கீழ் நடைபெறும்.

ஓவியங்களை எந்த வகை ஓவியங்களாகவும் போட்டியாளர்கள் விரும்பியபடி வரையலாம்.

மேற்படி கணக்கட்சி மற் அறிவித்தலை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின் றோம்.

நன்றி.

தமிழீழ ஒருங்கிணைய மேம்பாட்டு நிறுவனம்

(6558)

---


அனைத்துலகப் பெண்கள் நாளை முன்னிட்டு

விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பினால் நடாத்தப்படும்

# இலக்கிய, ஓவியப் போட்டிகள்

1994-03-08 இல் நிகழவிருக்கும் அனைத்துலகப் பெண்கள் நாளை முன்னிட்டு, தமிழீழப் பெண்களுக்கான இலக்கிய, ஓவியப் போட்டிகளை நடாத்த விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பு முடிவு செய்துள்ளது.

இலக்கியப் போட்டிகள் சிறுகதை, கவிதை என்ற இரண்டு விடயத்தின் கீழ் நடைபெறும்.

ஓவியங்களை எந்த வகை ஓவியங்களாகவும் போட்டியாளர்கள் விரும்பியபடி வரையலாம்.

போட்டிக்கான விதிமுறைகள்:-

★ படைப்புக்கள் தமிழீழப் பெண்களின் பிரச்சினைகளுக்கான தீர்வை முன்னெடுப்பதாகவும், அவர்களின் முன்னேற்றத்தைச் சுட்டுவதாகவும் அமைய வேண்டும்.

★ கவிதைகள் 35 வரிக்கு மேற்படாதனவாகவும், சிறுகதைகள் 4 பக்கங்களுக்கு மேற்படாதனவாகவும் இருக்கவேண்டும். ஓவியங்கள், போட்டியாளர்கள் விரும்பும்அளவில் வரையப்படலாம்.

★ போட்டியாளரின் சொந்தப் பெயர், முகவரி, வயது என்பன தனியாக ஒரு தாளில் எழுதப்பட்டு, படைப்புக்களுடன் இணைத்து அனுப்பப்படவேண்டும்.

★ கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், ''அனைத்துலகப் பெண்கள் நாள் இலக்கிய, ஓவியப் போட்டிக்கான படைப்புக்கள்'' என்று குறிப்பிடப்பட வேண்டும்.

★ நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

★ போட்டி முடிவுத்திகதி—1994-01-20

★ படைப்புக்களை அனுப்பவேண்டிய முகவரி

**சுதந்திரப்பறவைகள்,**
**வெளியீட்டுப் பிரிவு,**
**விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு,**
**கோண்டாவில்.**

தமிழீழப் பெண்களின் படைப்பாற்றலை ஊக்குவிக்கு முகமாக நடாத்தப்படும் இவ் இலக்கிய, ஓவியப் போட்டிகளில் கலந்து கொள்ளுமாறு அனைத்துப் பெண்களையும் விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்புக் கேட்டுக்கொள்கின்றது.

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு.

(சி/7924)


---


# முக்கிய அறிவித்தல்

யாழ். மாவட்ட அரச தனியார் வர்த்தக வங்கிகளின் வாடிக்கையாளர் நலன்காக்கும் சங்கம்
266A, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்

**இராணுவ நடவடிக்கை காரணமாக பாதிக்கப்பட்ட வங்கிகளின் வாடிக்கையாளர்கள் தங்களுடைய கணக்கு ஆவணங்களை இழந்தவர்கள் மேற்படி சங்கத்துக்கு எழுத்து மூலமாக முறைப்பாடுகளை தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.**

நன்றி.

(6559) செயலாளர்


---

கொண்டிருந்த சியாமாசெட்டி ரக குண்டுவீச்சு விமானம் ஒன்று திடீரென ஓர் குண்டை வீசிச் சென்றது. இக் குண்டு பிரப்பங்குளம் வீதியிலிருந்த நவரட்ணம் என்பவரின் வீட்டின் மீது வீழ்ந்துவெடித்ததில் அவரது மனைவி, மகள் ஆகியோரும் அயல்வீட்டில் வசித்த க்கப்பட்டுள்ளனர்.

மேற்படி தாக்குதலுக்கு இலக்காகிய நவரட்ணம் என்பவரின் வீடு பலத்தசேதமடைந்துள்ளதுடன் அயலிலிருந்த சண்முகரட்ணம், கணேசராஜா பாலசிங்கம் ஆகியோரின் வீடுகளும் சிறிது சேதமடைந்துள்ளன.

# கடற்படை உயர் அதிகாரிகள் பலர் பலி!

(கொழும்பு)

நாகதேவன்துறை கடற்படை முகாமில் பலியான கடற்படையினரில் பல கடற்படை உயரதிகாரிகளும் பலியாகியுள்ளதாக சர்வதேச செய்தி ஸ்தாபனங்கள் தெரிவித்தன

பூநகரி இராணுவ முகாம் விடுதலைப் புலிகளால் தாக்குதலுக்கு உள்ளான அதேவேளை இந்த கடற்படை முகாம் தாக்கப்பட்டது எனவும் இதனால் அங்கிருந்த கடற்படையினரும் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

---

சிதறி

களைத் தடுத்து நிறுத்தி விடுதலைப்புலிகள் கடும் தாக்குதல் நடாத்தி வருகின்றனர்.

மேலும் சிதறியோடி காடுகளுக்குள் புகுந்த படையினரைத்தேடும் நடவடிக்கைகளில் விடுதலைப்புலிகள்தொடர்ந்தும் ஈடுபட்டுள்ளனர்.

பல

வரவில்லைஎனவும் இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் மிகவும் கொடூரமாகவும், மூர்க்கத்தனமாகவும் நடைபெற்ற தாக்குதல் எனவும் இத் தாக்குதல் தொடர்வதால் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேதம் குறித்த விபரங்கள் அறியமுடியவில்லை எனவும் அச் செய்திகள் மேலும் தெரிவித்தன.

எறிகணை வீச்சு

பூநகரி இராணுவமுகாம் பகுதியில் இடம்பெற்று வரும் மோதலால் ஆனையிறவு இராணுவமுகாம் பகுதியிலும் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் அகோர எறிகணைத் தாக்குதலும் இடம் பெற்றது. இவ் எறிகணைகள் மாசார், பளை போன்ற இடங்களில் வந்து விழுந்ததால் அப்பகுதி மக்கள் இடம் பெயர்ந்த வண்ணமுள்ளனர்.

நாடகம்

வடமாகாணப் புற்று நோய்த் தடுப்புச் சங்கத்தினால் புற்று நோய் வராது தடுப்பது' பாது காப்பது சம்பந்தமான இரு மணித்தியாலயம் கொண்ட நாடகம் ஒன்று இன்று மாலை 3 30 மணி தொடக்கம்யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறும்

பூநகரி

தளங்களையும், சுமார் 20 கிலோ மீற்றர் நீளத்திற்கு வளையமாக அமைக்கப்பட்டிருந்த தொடர் காவலரண்களையும் கொண்டது

முதலில் பூநகரித் தளத்தின் ஒருபகுதியான நாகதேவன் கடற்படைத்தளம் மீது தாக்குதல் ஆரம்பமானது கடற்கரும்புலி வீரனான மேஜர் கணேஸ் மேற்கொண்ட வெற்றிகரமான தாக்குதலில் ஒரு நீருந்து விசைப்படகு அழிக்கப்பட்டது. இந்தத் துணிகரத் தாக்குதலானது ஏனைய விசைப்படகுகளைக் கைப்பற்றுவதற்கு வழி கோலியதாக அமைந்தது சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்ற உக்கிர தாக்குதலை அடுத்து நாகதேவன் கடற்படைத் தளம் புலிகள் வசம் வீழ்ந்தது.

இதேவேளைவிடுதலைப்புலிகளின் ஏனைய படையணிகள் பூநகரி தளத்தின் மற்றைய பகுதிகள் மீது பலமுனைத் தாக்குதலைத் தொடுத்தன. சுமார் ஏழுமணிநேரம் நீடித்தஉக்கிரசண்டையின்பூநகரித்தளம் முன்றாக புலிகளின் வசம் வீழ்ந்தது.

இந்தச் சண்டையில் 400க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் புலிகளின் கடுமையான தாக்குதலுக்கு ஈடுகொடுக்கமுடியாமல் ஏனைய படையினர் முகாமைவிட்டு சிதறி ஓடினர். ஓடியவர்களைத்தேடியழிக்கும் நடவடிக்கையில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டிருப்பதாக களத்திலிருந்து கடைசியாகக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

பூநகரித்தளம் வீழ்ச்சிஅடைந்தது சிறிலங்கா இராணுவத்தினருக்கு ஏற்பட்ட ஈடுசெய்ய முடியாத பாரிய இழப்பாகுமென உலகசெய்தி ஸ்தாபனங்கள் கருத்துத் தெரிவித்தன.

இலங்கையில் இனப்பிரச்சினை இல்லைஎன ஜனாதிபதி விஜேதுங்க வெளியிட்டுவரும் கூற்றுக்கு விடுதலைப் புலிகளின் இத் தாக்குதல் ஒரு பதிலடியாக அமைந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

---

# மாவீரர்களுக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

பூநகரி - நாகதேவன்துறை கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இராணுவ கடற்படைத் தகர்ப்பின் போது வீரச்சாவடைந்த விடுதலைப்புலிகளுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக குடாநாடு எங்கும் கறுப்பு கொடிகளும், தோரணங்களும் தொங்கவிடப்பட்டிருந்தன.

குடாநாடெங்கும் அஞ்சலிக்கான பல்வேறு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. வீதியில் ஓடும் வாகனங்களிலும் மக்களின் வீடுகளின் வாயில்களிலும் கறுப்புக் கொடிகள்கட்டப்பட்டுள்ளன.

பிரதான சந்திகள் தோறும் ஒலிபெருக்கிகள் பொருத்தப்பட்டு சோககீதங்கள் இசைக்கப்பட்டு வருகிறது.

# புலிகளின் கட்டுப்பாட்டில் யாழ். கடல் நீரேரி வந்தது

(லண்டன்)

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் தமது கை ஓங்கி வருவதாக இராணுவ அதிகாரிகள் அடிக்கடி கூறிவரும் இவ்வேளையில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பூநகரி இராணுவ முகாம் விடுதலைப் புலிகளிடம் வீழ்ந்தது பெரும் பின்னடைவே என பி. பி. ஸி. தெரிவித்தது பூநகரி இராணுவ முகாம் புலிகளிடம் வீழ்ந்தது குறித்து பி. பி. ஸி கருத்து தெரிவித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தது.

அதில்மேலும், இந்த தாக்குதல் மூலம் புலிகள் வடபகுதியை பெருநிலபரப்புடன் இணைக்கும் யாழ். வாவியில் தமது கட்டுப்பாட்டை பலப்படுத்தியுள்ளனர். பத்தாண்டு போரில் படையினருக்கு ஏற்பட்ட மிக மோசமான பின்னடைவு பூநகரி முகாம் அழிப்பு. தாக்குதலுக்குள்ளான முகாம் யாழ்ப்பாணத்தின் கழுத்து பகுதியில் உள்ளது. ஏழு மணிநேர சண்டையின் பின் 200 படையினர் பலியானனர் பலர் காயமடைந்தனர் முகாமிலிருந்து பின்வாங்கிய மேலும் பல படையினர் நிலை தெரியவில்லை. அவர்கள் மீட்கப்பட்டுவிட்டனரா அல்லது புலிகளிடம் சிக்கினரா என்பது தெளிவாகவில்லை. நாகதேவன்துறை பிடிக்கப்பட்டு பூநகரி முகாம் அழிக்கப்பட்டதாக இராணுவ அதிகாரிகள் தனிப்பட்ட ரீதியில் ஒப்புக்கொள்கின்றனர்.

பூநகரி குறித்து பாதுகாப்பு அமைச்சிடமிருந்து விபரம் வராதது இத்தாக்குதல் அவ்வளவு மோசமானதாக இருந்திருக்கும் என்பதையே காட்டுகின்றது. கிளாலியில் இராணுவம் மேற்கொண்ட தாக்குதலின் ஒரு மாதத்தின் பின்னர் இத்தாக்குதல் நடந்துள்ளது. புலிகள் அசுரபலத்துடன் பதிலடி கொடுத்துள்ளனர். சமாதான முயற்சி எதுவும் மேற்கொள்ளப்படாத நிலையில் இத்தாக்குதல் இருதரப்பின் போக்கையும் மேலும் கடினமாக்கும்.

இலங்கையில் இனப்பிரச்சினை என்று ஒன்றில்லை பயங்கரவாதிகள் நசுக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க அடிக்கடி கூறிவருகிறார். புலிப்படை நசுக்கப்பட வேண்டும் என்ற அவரின் விருப்பத்தை நிறைவேற்றுவது இயலாத காரியமாக இருக்க கூடும் என்பதை அவரின் படையினர் காட்டியுள்ளனர்என பி.பி.ஸி. குறிப்பிட்டது

# மிகவிரைவில் புலிகளை ஒழித்துவிட முடியும்

-ராணுவத்தினர் மத்தியில்சிசில்

(கொழும்பு)

கடந்த காலங்களில்நடைபெற்றசண்டைகளிலிருந்துமிக விரைவில்விடுதலைப்புலிகளை இல்லாதுஒழித்து விட முடியும் என்றநம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது நெஞ்சுரம் அற்ற விடுதலைப்புலிகளை ஒழித்து விடுவது உங்களால் முடியாத காரியம் அல்ல. யுத்த களத்தில் உங்களுடன் போராட விடுதலைப்புலிகள் தயாராக இல்லை என சிறிலங்கா இராணுவத்தளபதி சிசில் வைத்தியரத்தின தெரிவித்துள்ளார்

போரில் மரணித்த படையினர் தினம் தொடர்பாக அவர் வெளியிட்ட செய்தியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்; நாட்டின் ஒற்றுமையைப் பாதுகாப்பது எமது கடமை விடுதலைப் புலிகளிடமிருந்து நாட்டைக்காப்பாற்ற வேண்டிய சக்தி, அதிர்ஷ்டம் கிடைக்க வேண்டும் என இந்த நாளில் வாழ்த்துக்கூறுகிறேன்.

நீங்கள் அடையும் ஒவ்வொரு வெற்றிக்கும் நாமும் உங்களுடன் சேர்ந்து மகிழ்ச்சியடைகிறோம் உங்களுக்கு உதவ பல கைகள் காத்துள்ளன'' என்றார்.

---


யாழ் நகர் ஸ்ரீதர் திரையரங்கில்

**The Super Cops**

[கராட்டி]

தினசரி பிற்பகல் 4-00 மணி, மாலை 6-00 மணி

சனி. ஞாயிறு காலை 10.30, பிற்பகல் 2.30, 4.00, மாலை 6.00 மணி



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் கேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது